# கமால் ஒழுங்கை தெய்வச் சிலைகள் 14-ம் நூற்றாண்டுக்கு முந்தியன!

பக்கங்கள் 10 விலை சதம் 40

ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 20 எத 21 ரபி-அவ் 5 இதழ்: 354
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 3-2-79

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS RECEIVED 1979-2-... PERIODICAL DIVISION LIBRARY

[யாழ்ப்பாணம்]

யாழ் முஸ்லிம் பகுதியில் நிலத்துக்கடியில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள் 14ம் நூற்றாண்டுக்கு முந்தியவையெனக் கருதப்படுவதாக தொல்பொருள்துறை யாழ். பிரதேச அதிகாரி திரு.ம.பொ. செல்வரத்தினம் தெரிவித்தார்.

திரு செல்வரத்தினம்நேற்று சிலைகள் கண்டெடுக்கப்பட்ட கமால் ஒழுங்கைக்குச் சென்று பார்வையிட்டபின் அடுத்த வாரம் அவ்விடத்தில் அகழ்வாராய்ச்சி நடக்குமென்றார்.

பழைய வீட்டின் யன்னல் கள்ளி கதவுள் சிற்பவேலைப்பாடு அமைந்துள்ளதாகவும், 1851ம் ஆண்டு என ஒருமரத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வீட்டு உரிமையாளர் ஜனாப் எம். ஏ. ஹாகிம், இதற்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் ஆணையாளர் திரு. கே. சிவஞானம் எடுத்த உடன் நடவடிக்கைக்காகவும் பாராட்டினார்.

ஒன்று துர்க்கை அம்மன்சிலை என்றும் மற்றது காவல்தெய்வம் ஐயனாரின் சிலையாகஇருக்கலாமென்றும் அவர் கூறினார். [க]

## நயினை கைலாசநாதக் குருக்கள் காலமானார்

[யாழ்ப்பாணம்]

இலங்கையின் மூத்த இந்து மதக் குருக்களான, நயினை நாகபூஷணி அம்மன்கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் நேற்று மாலை காலமானார். அவர் இறக்கும்போது வயது 68.

இவர் இலங்கையில், நூற்றுக்கணக்கான ஆலயங்களின் கும்பாபிஷேகக் கிரிகைகளை நிறைவேற்றியது மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் கும்பாபிஷேகங்களை நிறைவேற்றச்சென்ற முதல் குருக்களுமாவார். அண்மையில் இவர் மலேசியாவில் கும்பாபிஷேகக் கிரிகைகளை நிறைவேற்றிவிட்டுத் திரும்பினார்.

அன்னாரின் மறைவு குறித்து 'ஈழநாடு' தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. [கெ]

# ஈழத்தமிழர்பிரச்னைகளில் மொரார்ஜி தலையிடுவார்!

## பிரிவினைதலைவர்களைசந்திக்க விருப்பம்; பேச்சில் ஆர்வம்

### தர்மரிடம் அவரே தெரிவித்த தகவல்கள்

(கொழும்பு)

இலங்கைக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு. இன்று முற்பகல் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கும் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், ஈழத் தமிழரின் பிரச்னைகளுக்குப் பிரிவினை தவிர்ந்த ஏனைய சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் உதவிசெய்வதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார். நிகழ்ச்சி நிரலில், பிரதமர் மொரார்ஜி தேசாய் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் இல்லையானாலும், கூட்டணித் தலைவர்களும், திரு.தேசாயும் சந்தித்துப் பேசுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று இலங்கைக்குவரும் இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்குப் பேச்சுவார்த்தைகளின்மூலம் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உதவுவதற்குத் தயாராக இருப்பதாகவும் ஈழத்தில் பிரிவினைகோரும்தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு விரும்புவதாகவும் இந்தியா சென்றிருந்த இலங்கைப் பாராளுமன்றத் தூதுக்குழுவில் ஒருவரான மானிப்பாய் பிரதிநிதியும் தமிழர்விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு வி. தர்மலிங்கத்திடம் தெரிவித்திருக்கிறார்.

திரு.வி. தர்மலிங்கம்நேற்று முன்தினம் கொழும்புதிரும்பினார்.

ஈழத்தமிழரின் பிரச்னைகளை பிரிவினையால் தீர்க்கமுடியாது என்று கருத்துத்தெரிவித்த இந்தியப் பிரதமர் திரு-மொரார்ஜிதேசாய், ஈழத்தமிழர்களின் பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்.

ஈழத்தமிழரின் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் தான் எந்த விதத்தில் உதவமுடியுமென்ற கேள்வியைக் கேட்டபிரதமர் மொரார்ஜி, எந்தவிதத்தில் உதவமுடியுமோ அந்தஅளவுக்குத் தாம் முயற்சிசெய்யத் தயாராக இருப்பதாகவும் திரு தர்மலிங்கத்திடம் தெரிவித்தாராம்.

#### 'உங்களைப் பகிஷ்கரிக்கவில்லை'

தமது இலங்கை விஜயத்தை தமிழர்விடுதலைக் கூட்டணியினர் பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தாம் அறியவந்திருப்பதாக திரு. மொரார்ஜி தேசாய் கூறியபோது அதற்குப் பதிலளித்த திரு. வி.தர்மலிங்கம், 'உங்களுடைய விஜயத்தைப் பகிஷ்கரிப்பதற்குத் தீர்மானிக்கவில்லை, 4ந் தேதி நடைபெறவிருக்கும் இலங்கையின் தேசியதினவிழாகொண்டாட்டவைபவங்களில் கலந்துகொள்வதில்லையென்ற கூட்டணி தீர்மானித்திருக்கிறது' என்று கூறினார்.

இலங்கைப் பாராளுமன்றக் குழு, பிரதமர் திரு.மொரார்ஜி தேசாயை புதுடில்லியில் சந்தித்துப் பேசியபோது. இலங்கைத் தூதுக்குழுவின் தலைவரான திரு. காமினி திசநாயகாவிடம் இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றிப் பிரதமர் விசாரித்தபோது "இதோ தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. இருக்கிறார், அவரிடமே கேளுங்கள்" என்று திரு. தர்மலிங்கத்தை அறிமுகப்படுத்தியபோதே இந்த உரையாடல் இடம்பெற்றது.

#### நிகழ்ச்சி நிரலில் இல்லை

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் இலங்கை விஜயத்தின் நிகழ்ச்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

ஆயினும் இன்று முற்பகல் 10-55க்கு கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தமது மருமகள் திருமதி பத்மாபென் தேசாயுடனும், தமது பரிவாரங்களுடனும் வந்திறங்கும் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன, பிரதமர்

[10 பக்கம் பார்க்க]

## "மாணவர் இயக்கத்திற்கு வேறுபாடுகளை மறந்து ஆதரவு அளியுங்கள்"

[யாழ்ப்பாணம்]

"மாணவர்களின் பாடசாலைப் பகிஷ்கரிப்பு இயக்கத்திற்கு ஆதரவாகத் தமிழ் வர்த்தகர்களும், இ. போ. ச. ஊழியர்களும், அரசாங்க, கூட்டுறவு ஊழியர்களும் நடவடிக்கைகளில் இறங்கவேண்டும்."

இலங்கை இந்து இளைஞர் பேரவைச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"பிஞ்சு நெஞ்சங்களான மாணவர்களைத் தனியாக விடாமல். அநீதியை எதிர்த்துப் போராடுவதில் பெரியவர்களாகிய நாம், அவர்கள் பக்கம் நின்று செயலில்

10-ம் பக்கம் பார்க்க

## சி. ஐ. டி. சம்பந்தன் கொலை: கைதடியில் இளைஞர் சந்தேகத்தில் கைது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சி ஐ. டி. சம்பந்தன் கொலை தொடர்பாக கைதடியில் வைத்து வாலிபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்கள், நீண்ட சடை வளர்த்திருந்தார்கள் என்றும், வெள்ளைச் சேட் அணிந்திருந்தார்களென்றும், பொலிஸாருக்கு ஏற்கனவே தகவல் கிடைத்திருந்தது.

கைதடி சந்தியில் வாகனங்கள் பொலிஸாரினால் சோதனையிடப்பட்டசமயம் பஸ்ஸில் நீண்ட சடை வளர்த்த ஒரு இளைஞர்மீது பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டதாம். அவர் கையில் வைத்திருந்த பார்சலை பொலிஸார் பார்த்த போது அதற்குள் வெள்ளை சேட் ஒன்று மடித்துவைக்கப்பட்டிருந்ததாம். உடனடியாக அவ்வாலிபரை பொலிஸார் கைது செய்து, விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். [க]

## 'என்ன தீங்குசெய்தேன்என சி. ஐ. டி. கேட்டதும் வெடி தீர்ந்தது'

[யாழ்ப்பாணம்]

"யாழ். பொலிஸ்நிலையம் நோக்கி, கொக்குவிலிலிருந்து நானும், ஆனந்தனும், சி. ஐ. டி. சம்பந்தனும் சென்றுகொண்டிருந்தோம். வழியில் இரண்டு இளைஞர்கள், கையில் ஏதோ வைத்திருந்து சம்பந்தனை மறித்தனர் நான் பயத்தினால் சென்றுவிட்டேன் எனக்கு இரண்டு சூட்டுச் சத்தம் கேட்டது."

கொக்குவில் சி. ஐ டி. சம்பந்தன் மரணவிசாரணையில் சாட்சியமளித்த கனகசபை குமாரகுலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாண நீதவான் திரு. நிகால் எட்வின் திஸநாயக்கா மரணவிசாரணை நடத்தினார்.

குமாரகுலசிங்கம் மேலும் கூறியதாவது: "சம்பவம் நடந்த தினம், நானும், ஆனந்தனும், சி. ஐ. டி. சம்பந்தனும், சயிக்கிளில் யாழ். பொலிஸ்நிலையத்திற்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் பெறச் சென்றுகொண்டிருந்தோம். ஆனந்தனின் சயிக்கிள் கரியரில் சம்பந்தன் வந்துகொண்டிருந்தார்.

"நான் சற்று முன்னால் சென்று கொண்டிருந்தேன். ஆனந்தனும், சி. ஐ. டி. சம்பந்தனும் என்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தனர்.

"சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தபோது இரண்டு இளைஞர்கள், கையில் ஏதோ வைத்துக்கொண்டு, சம்பந்தனை வழிமறித்து நிறுத்தினார்கள். பின்னால் வந்த ஆனந்தனும், சம்பந்தனும நின்றுவிட்டனர். நான் பயத்தினால் தொடர்ந்து முன்னோக்கிச் சென்றேன்.

"உங்களுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?" என்று சி. ஐ. டி. சம்பந்தன் இளைஞர்களுக்குக் கூறுவது கேட்டது. அதன் பின் இரண்டு வெடிச் சத்தம் கேட்டது. நான் ஓடிச் சென்றுவிட்டேன்". விசாரணை பின் போடப்பட்டுள்ளது. [கெ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கருகாமையில், பிரதான பாதைக்கருகில் 12 பரப்பு காணிவீட்டுடனும் வட்டுக்கோட்டை கிழக்கு தாவளையில் 10 பரப்பு மரங்களுடன் கூடிய வீட்டுக்காணியும் விற்பனைக்குண்டு. இரு நிலங்களுக்கும் "ஜனனி", 21, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துடன் பெப்ரவரி 5-ம், 6-ம் திகதிகளில் நேரடியாக தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 7833, யாழ்ப்பாணம். 1518

6 ஸ்ரீ இலக்கத் தொடருடைய லம்பிறட்டா ஸ்கூட்டர் 150 D L (இத்தாலியன் மொடல்) உன்னத நிலையில் விற்பனைக்குண்டு. 4-2-79-ந் திகதி பார்வையிடலாம். ஆ. சிவயோகன், 16, கொன்வென்ற் வீதி, யாழ்ப்பாணம். 1521

150 DL இத்தாலியன் லம்பிரட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. றிச் கோப்பி பார், நவீனசந்தை, யாழ்ப்பாணம். 1530

மிகவும் நல்ல நிலையிலுள்ள E N 9993 Ford Prefect 100 E மொடல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: Dr T குணரத்தினம், முல்லை நகர் கிளினிக், முல்லைத்தீவு 1522

## தேவை

பாவித்த தரமான அவரி தராசு ஒன்று எமது ஸ்தாபனத்திற்கு தேவை. தொடர்பு கொள்க: அபிராமி ஹாட்வெயர்ஸ், 135 [illegible] தூரியார் வீதி, யாழ்ப்பாண 1528

## பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1501

## கல்வி

குறுகியகால துரித போதனையும், பதிவுள்ள டிப்புளோமாவும் Radio Technics மின்சார தொழில் நுட்பம். விபரங்கள் முத்திரை உறையுடன் ஜே. ரி. எஸ், 53 (30), டேவிட் ரோட், யாழ்ப்பாணம். 1517

## அறிவித்தல்

மல்லாகம் கிராமப்பிரதேச எல்லைக்குள் இருக்கும் ஆதனங்களின் மீது 1978-ம் வருடம் நடைபெற்று முடிந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனங்களின் வருடப் பெறுமதியில் 6% சோலைவரியாக 1-1-1980 ஆண்டு முதல் அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளேன். இதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்புபவர்கள், தங்களது ஆட்சேபனைக்கான காரணங்களை எழுத்து மூலமாக இக்கிராமப்பிரதேச அலுவலகத்திற்கு 20-2-79க்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

க. மகாதேவா,
நிர்வாகஸ்தர்,
கிராமப்பிரதேசம்,
மல்லாகம்.

கிராமப்பிரதேசம்
காரியாலயம்,
மல்லாகம்,
31-1-79. 1520

## பாண்டிச்சேரியில் மௌன ஊர்வலம்

பாண்டிச்சேரி பெப். 3

பாண்டிச்சேரியில் நடைபெற்ற கலவரங்களின்போது பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு நேற்று மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் ஜானகி பாரூக் மரைக்காயர், முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் ஆகியோரும் இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டனர். [உ]

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## வெற்றிடங்கள்

### "மிட்வுட் இன்டஸ்றீ சின் (MIDWOOD INDUSTRIES) கற்பூர வில்லைகள்

தயாரிக்கும் பிரிவில் பின்வரும் இடங்கள் காலியாக உள்ளன. தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சிறப்பான சலுகைகள் வழங்கப்படும். அனுபவம் (இருப்பின்) தகுதிஉட்பட சகல விபரங்களுடன் 7-2-79க்கு முன் விண்ணப்பிக்கவும்.

(1) உற்பத்தி முகாமையாளர் (PRODUCTION MANAGER)

(2) இயந்திர இயக்குநர் (MACHINE OPERATOR)

(3) காரியாலய பியோன் (OFFICE PEON)

(4) பக்கிங் செய்யும் பெண்கள் (PACKING GIRLS)

மற்றும் பெப்பமின்ட்ஸ் [Peppermints], குளுக்கோஸ் இனிப்பு, சுயிங்கம் [Chewingum], இதர இனிப்புவகைகள் [Toffees], இனிப்புகளுக்கு சாயமிடுதல் [Sugar Coating] இவற்றில் ஒன்றிலாவது அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுதிக்கேற்ப பதவிகளும் நிரந்தர ஊதியமும் வழங்கப்படும். அத்துடன் ஆலோசனை வழங்குபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவும்:-

கைத்தொழில் திட்டமிடல்,
நிர்வாகப் பிரிவு,
(INDUSTRIAL PLANNING & MANAGERIAL DEPT.)
த. பெ. இலக்கம்: 87 - யாழ்ப்பாணம்.
1523


## வேலை ஆரம்பம்

[நெல்லியடி]

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதிரிக் கிராமமாக மாற்றப்படவுள்ள கன்பொல்லைக் கிராமத்தில் நிலஅளவைத் திணைக்களம் தமது கடமையை ஆரம்பித்துள்ளது.

மேற்படி கிராமத்தினைச் சூழ அளவீடு செய்ததுடன் பிரதான வீதியான கொடிகாமம் வீதி, கிராமத்திற்கு செல்லும் கன்பொல்லை வீதியையும் அளவீடு செய்துள்ளனர். இம்மாதிரிக் கிராமத்தில் உடனடியாக 15 வீடுகள் அமைக்கப்பட்டு வீடற்றவர்களுக்கு வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 21-ந் திகதி
சனிக்கிழமை
(3-2-79)

**மேடம்:-** கண்துடைப்பு வேலை நடைபெறும். மனப் போராட்டம் அதிகரிக்கும். சிலருக்கு நயன ரோகமும் தென்படலாம். சுகாதாரம் வேண்டும்.

**இடபம்:-** புதிய நண்பர்களைத் தேடிக்கொள்வீர்கள். விருந்துபசாரத்துக்கு இடமேற்படலாம். காதலர் வாழ்வில் சந்கண்டான தினம்.

**மிதுனம்:** சிந்தனைக் கனை தாக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். சகோதர வழியால் சஞ்சலப்படக் கூடிய செய்திக்கும் இடமுண்டு.

**கடகம்:-** தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். தாய்வழிப் பெருமையுண்டு வாகன நலனுடன் வாழ்விலும் சுகம்காணும்.

**சிங்கம்:-** வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும் புத்திரர்களால் பெரும் மகிழ்ச்சிக்கிடமுண்டு. அரசினர் ஆதரவும் கிடைக்கும்.

**கன்னி:-** தொழில்துறையில் முட்டுக்கட்டை தென்படும். உள்வீட்டிலயே [illegible] பூசல்கள் தோன்றும். [illegible] யற்றதினம்.

**துலாம்:-** களஸ்திரவழியால் நன்மைகள் வந்துசேரும். வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள். வாழ்க்கையில் தென்றல் வீசும்.

**விருச்சிகம்:-** செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைவீர்கள் தொழில் புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டிய திர்ப்பந்தம் ஏற்படலாம்.

**தனுசு:-** பொதுப்பணி உற்சாகத்தை ஏற்படுத்தும். பிதாவழித்தனமும் சேரும். தான தருமங்களில் ஈடுபாடு ஏற்படும் ஏற்படும் சுபதினம்.

**மகரம்:-** பதவியில் உயர்வுக்கு இடம் உண்டு. வியாபாரத்துறையில் முன்னேற்றம் காணப்படும். இடமாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும்.

**கும்பம்:-** இன்று அதிக ஆதாயம் கிடைக்கும் முயற்சியால் உயர்ச்சியுண்டு பொருள் வரவிலும் திருப்தி காணும். ஆதரவுக்கும் இடமுண்டு.

**மீனம்:-** தொழில்துறையில் நஷ்டத்திற்கு இடமுண்டு. கடன் தொல்லைகள் அதிகரிக்கும் புதிய முதலீடுகளை தவிர்ப்பதுடன் உஷாராக விருக்கவும்

சோதிடக்கலாநிதி
திருமலை [illegible] வேலுப்பிள்ளை

# தந்தையும் மகனும் மோதல்: இருவரும் ஆஸ்பத்திரியில்!

[யாழ்ப்பாணம்]

தங்கையைக் கண்டித்த அண்ணனுக்கும், தகப்பனுக்குமிடையில், ஏற்பட்ட சண்டையில் இருவரும் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாயைச் சேர்ந்த 33 வயதான நவரத்தினம் என்பவர் தங்கையைக் கண்டித்ததாகவும், இதனால் தந்தைக்கும் மைந்தனுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு சண்டைநடந்ததாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

சம்பவத்தின்போது காயமடைந்த இருவரும், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கோப்பாய் பொலிசார் இதுபற்றி விசாரணை செய்து வருகின்றனர். [கை]

## வீடு விலைக்குத் தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அல்லது வெளியில் 5 மைல் தூரத்திற்குள் 3 அல்லது 4 படுக்கை அறைகள் கொண்ட வீடு விலைக்குத் தேவை. தொடர்பு. R. திருநாவுக்கரசு, இலங்கைவங்கி, யாழ்ப்பாணம். 1515

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் 1. இராசையா செல்லத்துரையும்
2. பெண் வாலாம்பிகையும்
வழக்காளிகள்

இல. ஈடு/15030 எதிராக
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு
அரசடி ரோட்டு 119, கணபதி சின்னப்பு
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் ஈடு/15030ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1979ஆம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 15ஆம் திகதி [15-2-79] வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 5350/-ம், இதில் ரூபாய் 4500/-க்கு 16-9-75 திகதி தொடக்கம் 27-8 76 திகதி வரைக்கும் 100க்கு 14 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 494-80 சதமும் இதில் தீர்வையில் ரூபாய் 1000/ம் கோட்டுச் செலவில் ரூபாய் 200/-ம் இறுபட்டது (30-1-78)ல் விற்பனைச் செலவு ரூபா 247/- எதிராளியிடம் அறவிடவும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை 'நீர்நொச்சியடியும், கட்டைக்காடும்' நிலைப் பரப்பு 21. இதில் நிந்தமாக நிலைப்பரப்பு 3ம் குளி 1¼ம் அளவுகாரன் J. D. வீரசிங்கம் அளந்து விபரித்த 2355ஆம் இலக்கப்படத்திற் சுட்டப்படும் 1 ஆம் துண்டு. இந்தப் பரப்பு மூன்று குளி ஒன்றேகாலும், செய்பயிர் வான்பயிர்களும், 4ஆம் 5ஆம் துண்டுகளுக்குள் இருக்கும் கிணற்றுத் தூர்வையில் பங்கும் துலா, ஆடுகால் பாவிப்புரித்தும், ஒழுங்கையில் பங்கும், வழி வாய்க்கால் உரித்தும். எல்லை: கிழக்கு, கந்தசாமி பெண் செல்லப்பாவின் ஆதனம் வடக்கு, இளையவன் பழனியின் ஆதனமும் ரோட்டும். மேற்கு, பிச்சு ஐயரின் ஆதனம் தெற்கு, ஒழுங்கையின் முன்பகுதியும் மிகுதிக் காணியும் இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்

தெல்லிப்பழை,
9-11-78. 1525

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/ 15172

1. வேலுப்பிள்ளை சின்னத்துரை
வட்டுக்கோட்டை மேற்கு
வழக்காளி

எதிராக

1. கணபதியார் துரைராசா
சிவன் கோவிலடி
வட்டுக்கோட்டை மேற்கு
எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு/15172-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1979-ம் ஆண்டு மாசி மாதம் 13-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 3715/-ம் 31-12-75 தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 8% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 458/10 ம்.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை ''புமங்கொல்லை'' பரப்பு தில இலாச்சம் இரண்டு [2] குழி பதினாறுடன் பத்தில் மூன்று [16 3/10] ம் வீட்டு அத்திவாரக்கட்டும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை முகப்பும் கைஒழுங்கையும் இரத்தினம் பெண் அமுதம்மாவினுதனமும் ஆறுமுகத்துக்குரிய ஆதனமும் மேற்கு கணபதியார் சின்னத்துரைக்குரியாதனம் வடக்கு கணபதியார் துரைச்சாமிக்குரிய வாதனம் தெற்கு புன்னர் வயித்தியாரினுரிமைக்காறருக்குரிய வாதனமும் இரத்தினம் பெண் அமுதம்மாவுக்குரிய ஆதனங்கள் இதடங்கலும் பதிவு E 351/106.

ஜே. ஏ எட்வேட்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.

நாரந்தனை தெற்கு
ஊர்காவற்றுறை
1-2-79 1526

## மக்கள் கருத்து

### குழந்தைகளின் பாலுணவு


ஜே. ஆரின் தார்மிக அரசாங்கம் பதவிக்கு வருமுன் எத்தனையோ நன்மைகளை நாட்டிற்குச் செய்வதாக உறுதியளித்தது. தாம் பதவிக்கு வந்ததும் விலைவாசியைக் கட்டுப்படுத்தி நாட்டின் சகல இன மக்களும் களிப்பாகக் காலம் கழிப்பதற்கு வழிகோல் வழங்குமென உறுதியளித்தது. ஆயினும் அது பதவிக்கு வந்த காலத்திலிருந்து நடந்தவைகளையும் நடைபெறுகின்றவைகளையும் நோக்கும் பொழுது அவர்கள் உறுதியளித்தவற்றில் ஒன்றுமே செய்ததுபோல் தெரியவில்லை

குழந்தைகளின் பால்மாவகைகள் சாதாரணமாகக் கட்டுப்பாட்டு விலைக்கு எங்கும் எல்லோராலும் பெற வழிவகை செய்து கொடுப்போமென்று சொன்னார்கள் ஆனல் அவர்கள் என்னதான் சொன்னலும் மக்கள் கட்டுப்பாட்டு விலைக்குக் குழந்தைகளின் பால்மா வகைகளை வியாபாரச் சந்தைகளிலே பெறமுடியாமல் இருக்கின்றது.

குழந்தைகளின் முக்கிய பால்மா உணவாகிய எஸ். எம். ஏயின் ஏக விநியோகிஸ்தர்களாகிய கூ. மொ. வி. நிலையத்திலும் கூட இந்தப் பால்மாவை எந்நேரமும் பெறமுடிவதில்லை. அது வந்திறங்கிய ஒருசில நாட்களில் இருப்பு முடிவடைந்து விடுகின்றது ஆயினும் இது கறுப்புச் சந்தையில் எந்நேரத்திலும் பெறமுடிகின்றது. எவ்வாறு இது கறுப்புச் சந்தைக்காரர்களின் கைகளுக்குக் கிட்டுகின்றதென்பது ஒரு பெரும் புதிராகவே இருக்கின்றது, கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க இரண்டுமடங்கு பணம் அதிகமாகக் கொடுத்தே இதைப் பெற முடிகின்றது இந்தப்பால் மாவைத் தவிர்ந்த ஏனைய பால் மாக்களின் நடமாட்டமும் கறுப்புச் சந்தையில் தாராளம் இதனல் எத்தனை தாய்மார்கள் குழந்தைகளை வளர்ப்பதற்கு அவதிப்படுகின்றனர்கள். என்ன செய்வதென்று தெரியாமல் கறுப்புச் சந்தைக்காரர் கேட்கும் அதே விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர்கள். இந்நிலை முற்றாக மாற வேண்டும், எங்குமே பால்மா எளிதில் கிடைக்கக் கூடியதாக தார்மிக அரசாங்கம் வழிசெய்ய வேண்டும்.

கடந்த கால அரசாங்கத்தில் நாம் காணத எத்தனையோ ஆடம்பரப் பொருட்களை இன்றைய அரசாங்கத்தில் பெறமுடிகின்றது இதனல் வறியவர்களுக்கு என்ன பயன்? நாளைய பொழுது எவ்வாறு கழியும் என ஏங்கித் தவிப்பவர்கள் இதையா பார்க்கப் போகின்றனர்கள். ஆகவே அரசாங்கம் ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்வதை எவ்வாறு தனியார் நிறுவனங்களுக்குக் கையளித்தார்களோ அதேபோல் குழந்தைகளின் பால்மா வகைகளையும் இறக்குமதி செய்வதற்குத் தனியார் நிறுவனங்களுக்குக் கையளித்து அதற்கு ஒரு கட்டுப்பாட்டு விலையைச் சிறிது லாபத்துடன் விற்பதற்கு நிர்ணயிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் அரசாங்கத்திற்குச் சிரமமாக இருந்தால் குழந்தைகளின் பால்மாவகைகளை அரசாங்கம் போதியளவு இறக்குமதிசெய்து கூ. மொ. வி. நிலையத்துக்கு மாத்திரமல்லாது எல்லாக் கடைகளிலும் பெறக்கூடியதாக விநியோகம் செய்தல்வேண்டும். இவ்வாறு செய்வதினல் கறுப்புச்சந்தைக்காரர்களை ஒழித்துவிடலாம், இதோடு நிற்காமல் கறுப்புச்சந்தைக்காரர்களைப் பிடித்து ஆகக்கூடிய தண்டனையை நிறைவேற்றி வைத்து கறுப்புச்சந்தையையே முற்றாக இந் நாட்டிலிருந்தும் விரட்டிவிடவேண்டும். இதனல் சகலஇனமக்களும் சுபிட்சம் அடைவார்கள்.

"வண்ணைவாசி"
யாழ்ப்பாணம்.



## பாரதப்பிரதமரின் சுதந்திரதினச் செய்தி

நாளை நடைபெறும் இலங்கையின் முப்பதாவது சுதந்திர தினத்தை யொட்டி, இன்று வரும் பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் விடுத்துள்ள சுதந்திரதினச் செய்தி இது!

இலங்கையின் மாண்புமிகு ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவின் அழைப்பின் மீது, இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் முதலாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொள்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"சில நாட்களுக்கு முன்னர், உங்களின் மாண்புமிகு ஜனதிபதியை எங்களின் கௌரவ விருந்தினராக வரவேற்றதில் பெருமகிழ்ச்சி அடைந்தோம். உங்கள் ஜனதிபதி, எமது நீண்டகால நெருங்கிய நண்பன். எங்களது விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர் அவர், ஒரு உண்மையான ஜனநாயகவாதி. உலக அமைதியையும், அண்டை நாடுகளுடன் நேசஉறவையும் பெரிதும் விரும்புபவர் உங்கள் ஜனதிபதி.

"இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நெருங்கிய-நீண்டகால வரலாறு உண்டு இரு நாடுகளுமே; கலை, கலாச்சார, சமய தத்துவார்த்த ரீதியில் பொதுவான வரலாற்றைக் கொண்டது. எங்கள் நாட்டுமக்களின் வாழ்க்கையை நாம் வளமாக்க முயற்சிக்கும் போது; கௌதம புத்தர் கடைப்பிடித்தசகிப்புத்தன்மையும், ஜனநாயகத்தில் நாம்

[4-ம் பக்கம் பார்க்க]

## என் வாழ்க்கையின் கதை

ஜூலை 1969 16ந் தேதி பகல் 12-30 மணி அளவில், நான் நிதிஅமைச்சகத்தில் இருந்தபோது ஒரு ஸ்பெஷல் கடிதம் எனக்கு வந்தது. பிறகு 1-30 மணிக்குப் பிரதமர் நிதிஇலாகா பொறுப்பை எடுத்துக்கொண்டுவிட்டதாக அதிகாரபூர்வமான அறிவிப்பு ஒன்று வெளியாகியது. பிரதமர் என்னிடம் இதுபற்றி பேச விரும்பவில்லை என்பதையும் அவரது முடிவு ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்ட ஒன்று என்பதையும் தெளிவுபடுத்தியது.

பிரதமருடைய இந்தச் செய்கையிலிருந்து நான் அமைச்சரவையில் நீடித்து இருப்பதையும் அவர் விரும்பவில்லையென்று புரிந்துகொண்டேன். அவர் எனக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் நான் உதவிப்பிரதமராகத் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும் என்னிடம் என்ன இலாகா ஒப்படைக்கப்படும் என்பது பற்றி என்னுடு பிறகு பேசுவதாகவும் எழுதியிருந்தார். இதை ஒரு வியப்பான யோசனையாகவும் வெகு சாதுர்யமான நடவடிக்கையாகவும் எண்ணினேன். எனக்குக் கடிதம் எழுதிய விதத்தினலும் என்னிடம் இருந்து நிதிஇலாகாவை எடுத்துக்கொண்ட முறையினலும் என்னல் மந்திரி சபையில் தொடர்ந்து இருக்க முடியாது என்றும் அதனல் ராஜினமாச் செய்வதாகவும் பிரதமருக்கு நான் உடனே பதில் அனுப்பினேன்.

அன்று பிரதமரைச் சந்தித்துவிட்டு வந்த திரு. ஹிதேந்திரதேசாய், என்னை நேரில் எப்படிப் பார்த்துப் பேசுவது என்று கவலையாக இருப்பதாகவும், கூப்பிட்டு அனுப்பினல் நான் வந்து பார்ப்பேன் என்றுதான் பிரதமருக்கு யோசனை கூறியதாகவும் தெரிவித்துவிட்டுப் போனர். அன்று இரவு எட்டு மணி சுமாருக்கு என்னைச் சந்திக்கவிருப்புவதாகப் பிரதமர் டெலிபோனில் பேசினர். நேரமாகிவிட்டதால் அன்று என்னல் அவரைச் சந்திக்க முடியாதென்றும் ஆட்சேபனை இல்லாவிட்டால் மறுநாள் சந்திப்பதாகவும் சொன்னேன். அதேபோல் மறுநாள் அவரைப் போய்ச் சந்தித்தேன். தொடர்ந்து மந்திரி சபையில் இருக்கும்படி பிரதமர் என்னைக் கேட்டுக்கொண்டார்.

"என் சுய கௌரவத்தை நீங்கள் புண்படுத்திய விதமும் இந் விஷயம் பற்றி நீங்கள் என்னிடம் நேரில் விவாதிக்கக்கூட நடைமுறை மரியாதை காட்டாததும் நான் மந்திரிசபையில் தொடர்ந்திருப்பதை நீங்கள் விரும்பவில்லை என்பதை நிதர்சனமாகக் காட்டுகின்றன. ஆகவே நான் ராஜினமா செய்வதைத்தவிரவேறுமாற்று கிடையாது. நிதி இலாகாவில் மாற்றம் வேண்டுமென்று நீங்கள் விரும்பினல் அது பற்றி என்னுேடு பேசியிருக்கலாம். உங்களோடு நான் எந்த விஷயத்தையும் தவறன முறையில் விவாதித்தது கிடையாது என்பது உங்களுக்கே தெரியும் உங்களோடு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த சமயங்களில் கூட நான்அவமரியாதையாகவோ முறைதவறியோ நடந்து கொண்டது கிடையாது. அப்படி யாரும் தன் குமாஸ்தாவுடன் கூட நடந்து கொள்ளாதமுறையில் நீங்கள் என்னுேடு நடந்துகொண்டதாக நினைத்தேன்" என்றுகூறினேன். முறை சரியில்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

"தவறக நடந்து கொண்டு விட்டதாக நீங்கள் இப்போது கருதினல் நீங்கள் எடுத்தநடவடிக்கைகளை வாபஸ் பெற்றுக் கொண்டுவிடலாம்" என்று நான் சொன்னபோது, "அப்படிச் செய்வது கஷ்டம்" என்று அவர் கூறினர்.

"ஒரு தவறு நடந்துவிட்டதாக நீங்கள் கருதினல் அதை நீங்கள் திருத்தவேண்டும். அப்படிச் செய்ய இஷ்டமில்லை என்றல் நான் வற்புறுத்தமாட்டேன். நீங்களே அப்படிச் செய்யவேண்டும் என்று ஒப்புக்கொண்டு செய்தால் போதும்" என்றேன்.

உத்தரப்பிரதேச முதல்வர் திரு சந்திரபானுகுப்தா நான் பிரதமரை எதிர்ப்பதாகத் தன்னிடம் பிரதமர் கூறியதாகச் சொன்னர் நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் இதுபற்றிக் குறிப்பிட்டு இம்

(4-ம் பக்கம்பார்க்க)

நட்பின் தூதுவனக இலங்கைக்கு வருகைதரும்

இந்தியப் பிரதமர்

திரு. மொரார்ஜி தேசாயை

வரவேற்கின்றேம்

விழா சிறப்புற அனைவரையும் வாழ்த்துகிறேம்

ஹொண்டா

உலகில் முதல் நம்பர்!

ஸ்டபோர்ட் மோட்டார் கம்பனி லிமிட்டெட்,

"ஹொண்டா ஹவுஸ்"

718/7, மருதானை ரோட் - கொழும்பு - 10.

தொலைபேசி: 94362

# விசாரணை நடுவில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

சரவணை கொலைமுயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76 மே 15ம் திகதி சரவணையில். அ. கமலதேவியை குத்திக் கொலை செய்ய முயற்சித்ததாக குமாரவேலு பத்மநாதன் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என் நவரத்தினம். சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராஜா, சட்டத்தரணி எஸ், சுரேந்திரன் ஆகியோர் ஆஜரானார்கள். அரச தரப்பில் சட்டத்தரணி எஸ்.ஸ்ரீரஞ்சன் ஆஜரானார். (க)


## பாட்டா

'போக்குவரத்து அறிகுறி போட்டி'

### பரிசு பெறுவோர்

1ம் பரிசு
றலி கோஸ்டர்சைக்கிள்
எச். விக்கிரமறத்ன,
டம்பொக்க,
பொயகன.

2ம் பரிசு
'சொப்பர்' சைக்கிள் (கியருடன்)
எம். பிலிப் அன்ரன்,
லக்பிறியா ஃபேனிஷர்ஸ்
34, ஹொலஹெல
கேகாலை.

3ம் பரிசு
'சொப்பர்' சைக்கிள் (கியர் அற்றது)
நிஹால் றணசிங்க,
8. கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.

4ம் பரிசு
மெக்கானோ பெட்டி இல. 5
ஆர். ஏ. டயறற்ன பெரேரா,
றம்புக்கனை,
பண்டாரகம.

5ம் பரிசு
'லிகோ' பிளாஸ்டிக் பில்டிங் புளொக்
ஜே ஏ. அனுரா ஜயசிங்க,
கும்பதுவ,
மீகஹத்தென.

6ம் பரிசு
பேசும் வியூ மாஸ்டர்
எம். கே. நிமால் பத்மகிறி கருணாதிலக,
386A, புதலவத்தை,
தந்திரிமுல,
பாணந்துறை.

7ம் பரிசு
புத்தகம் வாங்கும் பத்திரம்
பி. நில்மினி அமதொறு,
36, வத்தறனதென ரோட்,
கண்டி.

8ம் பரிசு
விளையாட்டு பொருட்கள்
எம். வை. எம். சுலைகார் அலி,
42, றெசவொயர் வீதி,
கொழும்பு - 9.

9ம் பரிசு
பொக்கற் றேடியோ
எம் ஜி. குமார நவதென
ஹொறன்கல,
தல்கஸ்வெல.

10ம் பரிசு
மெலோடிகா
டி. கே. டயானந்த
பி. எல். 6, 2ம் தெரு,
அம்பாறை.

### 25 ஆறுதற் பரிசுகள் பாட்டா பாதணி

கப்பில யசந்த தலுகொடை,
கொழும்பு - 8.

அசோக் விஸ்வாஜித் ருஜபக்ஸ,
வியாங்கொடை.

சறியா ஃபலூல்,
தெகிவலை.

ஆர். இராமச்சந்திரன்.
மட்டுநகர்.

அரோஷா சமிக்கா ஜயஸிங்க,
வஹரா

மதுபனி ஹெராத்
ஹிங்குராகொடை.

ஸன்ஜிலா கமஹே டயஸ்,
மாத்தறை.

சி. எச். நிகால் றன்ஜித்,
ஊவா-பறணகம.

சுனேத்ரா தோமஸ்,
பத்தரமுல்ல.

பிரசாத் பொந்ஜோ,
தெகிவலை.

கே. பிறிஜட் அமிலா பீரிஸ்,
மொறட்டுவ.

எஸ். கே. பிறிதி நிஷாந்த,
கனேமுல.

இரவிந்திரா கெப்பற்றிபொல,
நுகேகொடை.

நயான நாவொட விதாரணை,
தெகிவலை.

கே ஏ அனுரா உபேந்திரா பெரேரா,
பாணந்துறை.

ஸன்ஜிவா டிசநாயக்க.
நுகேகொடை.

நிமலரத்ன குருகே,
படாவிய.

பி. டி. சீதா பிறியாங்கனி விக்கிரமசிங்க
வட்டினபஹா.

ஒ பி குலதுங்க,
ஹிங்குரன.

இ. சுரேஷ்,
கொடிகாமம்.

சி ஜி. டி. எஸ். குமார பெரேரா,
பெல்மதுலை.

ஜகத் சந்தன லிலாரத்ன,
கொலன்னவ

எலிகா விஜேதுங்க,
நாத்தாண்டிய.

ரேகித உபானந்த சந்திரசேகர,
அனுரதபுரி

ஜி ஆர். சிசிற இரத்ன பண்டார,
அலவத்துறை


# என் வாழ்க்கையின்.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மாதிரி என்மீது பொய்க் குற்றச்சாட்டுக் கூறுவது சரியல்லவென்றும் எழுதினேன். அம்மாதிரி எதுவும கூறவில்லை என்று பிரதமர் மறுத்தவிட்டார். இதுபற்றித் திரும்பவும் குப்தாவிடம் விசாரித்த போது என்னிடம் கூறியது சரி என்றும் இம்மாதிரி இக்கட்டான நிலையிலிருந்து உண்மையை மறுத்துக் கூறித் தப்பித்துக்கொள்ள பிரதமர் முயலுகிறார் என்றும் சொன்னார். நான் திரும்பவும், குப்தா, தான் சொன்னது சரிதான் என்று நிச்சயமாகச் சொல்வதாகப் பிரதமருக்கு எழுதினேன். இதற்குப் பதில் எதுவும் வரவில்லை.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு 19-ந் திகதி அன்று காங்கிரஸ் பார்லிமெண்டறி கூட்டத்தில் இந்த விஷயத்தை வேறு விதமாகக் கூறினார். நிதி இலாகாவில் அனுபவம் பெறுவதற்காகவே அந்த இலாகாப் பொறுப்பை தான் ஏற்றுக் கொண்டதாகக் கூறினார். பிரதமருடைய அனுமதியுடன் நான் பதில் கூறினேன்.

''நிதி இலாகாவில் அனுபவம் பெற விரும்புவதாகப் பிரதமர் என்னிடம் கூறியிருந்தால் மனப்பூர்வமாக நானே பொறுப்புக்களை ஒப்படைத்திருப்பேன். தனக்குவேண்டிய இலாகாக்களை வைத்துக்கொள்ளப் பிரதமருக்கு உரிமையுண்டு. ஆனால் எனக்கு எழுதியகடிதத்தில் வேறுவிதமாகக் காரணம் காட்டியிருந்தார். தன்னுடைய எல்லா முடிவுகளையும் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று பிரதமர் கூறுவது ஜனநாயக மரபுகளுக்குப் புறம்பானது. இம்மாதிரி முடிவெடுக்கும் பெரிய அதிகாரம் ஜனநாயகத்தில் எந்த ஒரு தனி மனிதரிடத்திலும் இருக்கக் கூடாது. முடிவுகளை எடுக்கும் அதிகாரம் மந்திரிசபையிடம் இருக்க வேண்டும். காங்கிரஸ் தலைவருக்கும் இம்மாதிரி அதிகாரங்கள் கூடாது. காரியக்கமிட்டி நிர்ணயித்துக் கொடுக்கும் கொள்கைகளை அவர் செயல்படுத்த வேண்டும். பிரதமரின் முடிவுகளை மந்திரிகள் தாமாகவே முன்வந்து ஏற்றுக்கொள்வதில் தவறில்லை ஆனால் பலருக்கும் வேறுவிதமான அபிப்பிராயம் இருந்து அதை அவர்கள் வெளிப்படுத்தினால் பெரும்பான்மை முடிவை பிரதமர் ஏற்கவேண்டும் பம்பாய் முதலமைச்சராக இருந்த போது நான் இந்தக் கொள்கைப்படிதான் நடக்கின்றேன். மெஜாரிட்டி ஒப்புக்கொண்டு விட்டால் கட்சியின் எந்த முடிவையும் நான் அதற்குச் சம்மதிக்காத போதும் கூட என் சொந்த முடிவைப் போல எண்ணிச் செயல்படுத்தி இருக்கிறேன். இதற்கு மீறி நான் நடந்திருக்கிறேன் என்று யாரும் குறைகூற முடியாது ''

இந்தக் கூட்டம் முடிந்த பிறகு மாலை 3 அல்லது 4 மணி அளவில் பிரதமர் என் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டதாக ஒரு கடிதம் அனுப்பினார். என் பதிலை உடனே அனுப்பினேன்.

அன்று இரவே 14 வங்கிகளை தேசிய மயமாக்கி விட்டதாகப் பிரதமர் முடிவு எடுத்துப் பிரகடனமும் செய்தார்.

1967ல் நான் மந்திரிசபையில் சேர்ந்த பிறகு அவருடைய இல்லத்தைப் பற்றி அவரோடு பேசினேன். அ போது அவர் இருந்த வீடு வசதியாக இல்லாததால் வேறு வீடு கட்ட ஒரு யோசனை இருந்தது. முதலில் அவர் நம்பர 5, டாக்டர் ராஜேந்திரபிரசாத் ரோடு இல்லத்தையோ, சாஸ்திரி வசித்த இல்லத்தையோ எடுத்துக்கொள்வதாக இருந்தார். 5, ராஜேந்திரபிரசாத் ரோடு இல்லத்தை நான் சென்று பார்த்துவிட்டு பிரதமரையும் பேரய் பார்த்துவிட்டு வந்து தனக்குவேண்டிய வீட்டை எடுத்துக்கொள்ளும்படியும் அவர் வேண்டாம் என்ற வீட்டை நான் எடுத்துக் கொள்வதாகவும் கூறினேன். கடைசியாக அவர் இரண்டு வீடுகளையுமே எடுத்துக்கொள்ளவில்லை. பிறகு ஹைதராபாத் இல்லத்தை உபயோகித்துக்கொள்ள நினைத்தார். இது மிகப்பெரிய ஒரு கட்டடம். அதில அவர் வசித்தால் எல்லாரும். அதைப்பற்றி விமர்சிப்பார்கள் என்று கருதினேன். பிறகு ''தர்பங்கா' இல்லத்தை வாங்குவதாக ஒரு யோசனை. அதிக விலையாக இருந்ததால் கைவிட்டுவிட்டோம்.

ஜவஹர்லால் நேரு இருந்த போது வசித்த அவர் இறந்த பிறகு அவரது நினைவு டிரஸ்ட்டுக்குக் கொடுக்கப்பட்ட 3 தீன் முர்த்தி மார்க் இல்லத்தில் வசிப்பதற்கு அவருக்கு ஆட்சேபனை இல்லை என்பது நான் பிரதமரோடு பேசியதிலிருந்து தெரிந்தது. அந்த வீடு பிரதமர் வசிப்பதற்கு மிகவும் தகுதியான வீடு என்றும், அவர் அங்கு வசிப்பது ரொம்பவும் சரியானது என்றும் நான் கூறினேன். அப்படியிருந்தால் நேரு மியூஸியம் வைக்க வேறு கட்டடம் கட்டிக்கொள்ளலாம் என்றும் இதில் அவர் கூறும் எந்த முடிவையும் நான் ஒப்புக்கொள்கிறேன் என்றும் கூறினேன்.

கொஞ்ச நாட்கள் கழித்து ஒரு நாள் தினேஷ் சிங் என்னிடம் அன்று நடக்கவிருக்கும் மந்திரிசபைக் கூட்டத்தில் பிரதமரின் இல்லம் பற்றிய விஷயத்தில் ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று பிரதமர் விரும்புவதாகக் கூறினார். அந்தக் கூட்டத்துக்கு தான் வரமாட்டேன் என்றும், என்னைத் தலைமை வகிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

மந்திரிசபை எடுக்கும் முடிவுக்குப் பிரதமர் கட்டுப்படுவதாக இருந்தால் அமைச்சரவைக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பதாக நான் தினேஷ் சிங்கிடம் கண்டிப்பாகக் கூறினேன். அதுபற்றிப் பிரதமரிடம் ஆலோசனை கேட்டுக்கொள்ளும்படி தினேஷ்சிங்கிடம் சொல்லி அனுப்பினேன்.

தீன் மூர்த்தி இல்லத்தில் தான் இருக்கவேண்டும் என்ற காபினெட் முடிவைத்தான் தடையின்றி ஏற்றுக்கொள்வதாகப் பிரதமர் கூறியதாக தினேஷ்சிங் என்னிடம் கூறினார் பின்னால் ஏதாவது தகராறு வரக்கூடாது என்பதற்காக நானே பிரதமரிடம் இது பற்றிப் பேசியபோது அவர் தினேஷ்சிங்கிடம் கூறியதை ஊர்ஜிதப்படுத்தினார். காபினெட் கூட்டத்தில் ஒரே ஒருவரைத் தவிர மற்றவர் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டனர். ஜவஹர்லால்நேரு நினைவு ட்ரஸ்ட்டுக்கு ஜனாதிபதி தலைவராதலால் அவருடைய அனுமதியைப் பெறவேண்டும் என்று நான் கூறினேன். அதே போல் டாக்டர் ஜாகிர் ஹுஸேனைச் சந்தித்துப் பேசினேன். இது சரியான முடிவு என்றும், அதற்கு அவர் சம்மதம் தருவதாகவும் கூறினார். இது எல்லாவற்றையும் நான் பிரதமரிடம் தெரிவித்தேன்.

காபினெட் முடிவை நிறைவேற்றுவதாகப் பிரதமர் கூறினார். பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து ஜவஹர்லால் நேரு நினைவுடிரஸ்ட் உறுப்பினர்கள் சிலர் இதற்கு ஆட்சேபம் தெரிவித்ததால், பிரதமரே மந்திரி சபையை ஆலோசனை கேட்காமல் தீன் மூர்த்தி இல்லத்துக்குப் போவதில்லை என்று தானே முடிவெடுத்தார். அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்படாமல் போய்விட்டது. பிரதமருடைய இந்த முடிவு தன் விஷ்டப்படி எடுக்கப்பட்டது. ஒருதலைப்பட்சமானது என்னிடம் கொடுக்கப்பட்ட உறுதிமொழிக்குப் புறப்பானது. ஏதாவது மனஸ்தாபம் வரும் என்று கருதி நான் இதற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

பிறகு பிரதமருக்குப் புதிதாக ஒருவீடு கட்டுவதென்று முடிவு எடுக்கப்பட்டது அதிக செலவு பிடிக்குமாதலால் அந்த யோசனை எனக்குச் சரியாகப் படவில்லை.

பிரதமருடைய வீடு பற்றிய எந்த முடிவையும் பிரதமரே தான் எடுக்கவேண்டும் என்றும் அவரே பொறுப்பு என்றும் நானே ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தபடியால் இந்த யோசனைக்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

தீன்மூர்த்தி இல்லத்துக்குப் பிரதமர் போவதாக முதலில் முடிவு எடுக்கப்பட்டதால் நேரு நினைவாலயத்துக்குப் புதுக் கட்டடம் கட்ட பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி இருந்தேன். பிறகு காபினெட் முடிவைப் புறக்கணித்து ஜவஹர்லால் நேரு நினைவாலயம் தொடர்ந்து தீன்மூர்த்தி இல்லத்திலேயே இருக்கும் என்று முடிவாகிவிட்டதால் நினைவாலயத்துக்குப் புதுக் கட்டடம் கட்டும நிதியை நான் மறுத்துவிட்டேன்

மோரார்ஜி தேசாயின் 'சுய சரிதை' 'என் வாழ்க்கையின் கதை' (The Story of My Life) புத்தகத்திலிருந்து வெளியிட்டவர்கள் மாக்மில்லன், இந்தியா. விலை ரூபா 125. (இரண்டு வால்யூம்கள்)

## பாரத...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையும் எம்மை வழிநடத்த வேண்டும்.

''கண்டியில் நடைபெறும் சுதந்திரதின நிகழ்ச்சிகளில் கௌரவ விருந்தினராக கலந்து கொள்ளுமாறு நான் அழைக்கப்பட்டதை, எனது நாட்டுக்குக்கிடைத்த ஒரு பெருமையாக நான் கருதுகின்றேன். எனது விஜயத்தின்போது, உங்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளையும் திட்டங்களையும் அதன் வளர்ச்சிகளையும் மகாவலி அபிவிருத்தித்திட்டம் போன்ற நாட்டின் பிரமாண்டமான பொருளாதாரத் திட்டத்தையும் நேரில் பார்வையிட்டு இதன் பலாபலன்கள் பற்றி அறிந்து கொள்ளவிருக்கின்றேன். மகாவலித் திட்ட வெற்றியில் இந்திய நிறுவனங்களும், இந்திய நிபுணர்களும் கூட தங்கள் பங்கினை அளித்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். எதிர்காலத்தில், இருநாடுகளினது அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் நாம் மேலும் பலனுள்ள முறையில் ஒத்துழைப்பு அளிக்கமுடியும் என்பது எனது நம்பிக்கை.

''இலங்கை-இந்தியா நாடுகளுக்கிடையே மேலும் நல்லுறவை வளர்த்து, இலங்கை மக்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு அவர்களின் சுபிட்சத்துக்கு எங்களால் முடிந்த உதவிகளையும் ஒத்துழைப்பையும் அளிப்பதே எனது விருப்பமாகும்'' என்று பாரதப் பிரதமர் தமது சுதந்திரதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அண்ணா நினைவுதினம்

[யாழ்ப்பாணம்]

பேரறிஞர் அண்ணா நினைவு தினம் இன்று மாலை கோண்டாவில் கிழக்கு சந்திக்கு அருகில் நடைபெறவிருக்கிறது.

திரு. ச. சுந்தரலிங்கம் தலைமைவகிப்பார். நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், கோனவ மகேசன், வண்ணை ஆனந்தன் உட்பட பலர் உரையாற்றுவர். [உ]

# காந்திஜியின் பாதையில் பிரதமர் மொரார்ஜி

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமது இளம் பிராயத்திலிருந்தே மகாத்மா காந்தியின் கொள்கைகளினாலும், வாழ்க்கைத் தத்துவங்களினாலும் ஆட்கொள்ளப்பட்டிருந்தார். அவர் பொது வாழ்வை மிக நம்பிக்கையுடனும் அசாத்தியத் துணிச்சலுடனும் ஆரம்பித்து காந்திஜியின் கொள்கைகளிலிருந்து அவர் கற்றுக்கொண்டவை அவரது வாழ்க்கைப் பாதைக்கு ஒளியூட்டியது என்றே கூறலாம்.

காந்திமகானின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக திரு. தேசாய் தமது வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்து வந்தார். சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவர் என்றுமே தமது கொள்கைகளை மாற்றியது கிடையாது.

குஜராத் மாநிலத்தில் உள்ள பஹாடெலி கிராமத்தில் பிராமண குலத்தில் பிறந்த திரு. தேசாய் பம்பாயில் உள்ள வில்சன் கல்லூரியில் கல்வி பயின்றார்.

1918ம் ஆண்டு பம்பாய் மாகாண அரசாங்க சேவையில் நுழைந்த இவர் 12ஆண்டு காலமாக அன்னிய நாட்டு அரசுக்காக உழைத்ததன் மூலம் அவர் தமது நாட்டுக்கு சேவைசெய்யாதிருந்தார்.

பின்னர் இப் பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்த இவர் 1930 ஆண்டில்அரசுக்கு எதிரான ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு மூன்று தடவைகள கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார்.

1931ம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தவராகச் சேர்ந்த திரு. தேசாய் முதலாவது காங்கிரஸ் அரசில் நிதியமைச்சராகப் பதவிவகித்தார். பின்னர் 1937ல் பம்பாய் அரசில் உள்நாட்டு, நிதியமைச்சராகவும் இருந்தார்.

1952ம் ஆண்டு இந்தியாவில் முதல் தடவையாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற பம்பாய் மாநில முதல்வரானார். 1956ம் ஆண்டு வரையிலான இவரது பதவிக்காலத்தில் பல எட்டமுடியாத சீர்திருத்தங்கள் பொலிஸ் சேவையிலும் நிலவரி அமைப்புமுறையிலும் மேற்கொள்ளப்பட்டன.

கிராமங்களிலும் பட்டினங்களிலும் வாழும் ஏழைமக்களினதும் வசதியற்றவர்களினதும் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படாவிடின் சோஷலிசம் என்பதற்கு அர்த்தமே இல்லாமல்போய்விடும் என்ற கொள்கையையே இவர் கடைப்பிடித்து வருகிறார். குடியிருப்பாளர்களையும் விவசாயிகளையும் எதிர்நோக்கும் கஷ்டங்களைப் போக்குவதற்காக திரு. தேசாய் அவர்களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பை அளித்தார். இதன்மூலம் திரு. தேசாயின் பம்பாய் மாநில அரசு ஏனைய மாநில அரசுகளை விட முன்னணியில் திகழ்ந்தது.

மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டபின்னர் திரு.தேசாய் 1956ம் ஆண்டு நவம்பர் 14ம் திகதி மத்திய அரசில் சேர்ந்து வர்த்தக கைத்தொழில் அமைச்சரானார். 1958ம் ஆண்டு மார்ச் 22ம் திகதி நிதியமைச்சையும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நாட்டின் பாதுகாப்பு, அபிவிருத்தி தேவைகளைச் சமாளிப்பதற்காக திரு. தேசாய், வரிகளை அதிகரித்து பல அநாவசிய செலவீனங்களை குறைத்து சிக்கனத்தைக் கடைப்பிடித்தார்.

சூரத் தொகுதியிலிருந்து 1962ம் ஆண்டு மீண்டும் லோகசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட திரு. மொரார்ஜி மறைந்த ஜவஹர்லால்நேருவின் அரசில் நிதிமந்திரியாகப் பதவிஏற்றுக்கொண்டார். காமராஜரின் திட்டத்திற்கமைய அடுத்தாண்டே அவர் பதவியிலிருந்து ஓய்வுபெற வேண்டியேற்பட்டது.

66-67ம் ஆண்டுப் பகுதியில் நிர்வாகச் சீர்திருத்தக்கமிஷன் தலைவராக இருந்த திரு. தேசாய் நாட்டின் நிர்வாக அமைப்பை மாற்றியமைக்கும் முக்கிய பணியில் ஈடுபட்டார். நீண்டகாலமாக அரசாங்க ஊழியராகவும் மாநிலமுதல்வராகவும் மத்திய அரசின் அமைச்சராகவும் கடமையாற்றியதன், மூலம் திரு. தேசாய்க்கு ஏற்பட்ட பலதரப்பட்ட அனுபவங்கள் இச் சீரிய பணியை நிறைவேற்றப் பெரிதும் உதவியாக இருந்தது.

திரு. தேசாய் மீண்டும் 1967ம் ஆண்டு லோகசபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு திருமதி இந்திராகாந்தியின் அமைச்சரவையில் உதவிப் பிரதமராகவும் நிதியமைச்சராகவும் இருந்து வந்தார்.

இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திக்கு நாட்டில் உள்ள வளங்களை அதிகரிக்க வேண்டுமாயின் நாட்டு மக்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களையவேண்டும் என்பதை மனதில்கொண்டே திரு. தேசாய் பணியாற்றி வந்தார்.

மகாத்மாகாந்தியின் காலத்தில் தாம் பிறந்தமையினாலும் அவருடன் இணைந்து பணியாற்றியவராயினாலும் திரு. தேசாய் இப் பணிகளை நிறைவேற்றவேண்டியது தமது முக்கிய கடமை என்று கருதி உழைத்துவந்தார்.

1969ம் ஆண்டு ஜூலை மாதம்... அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி திரு. மொரார்ஜிதேசாயிடமிருந்து நிதிஅமைச்சைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அமைச்சுக்களை மாற்றும் உரிமை பிரதமருக்கு இருக்கின்றதெனினும் தம்மிடம் இருந்து நிதிஅமைச்சின் பொறுப்பை பிரதமர் ஏற்றுக்கொண்டது தம்மை அவமானப்படுத்தும் செயல் என்று தமது சுயமரியாதைக்கு இழுக்கு என்றும் திரு. தேசாய் கருதினார். எனவே இதனையடுத்து அவர் தமது பிரதிப் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்ததுடன் அரசாங்கத்திலிருந்தும் வெளியேறினார்.

இதன்பின்னரே இந்திய காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது. திரு. தேசாய் ஸ்தாபனகாங்கிரசில் இருந்துகொண்டு அரசியல்நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார்.

1971ம் ஆண்டு மீண்டும் ஆட்சிமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட திரு. தேசாய் 1975ம் ஆண்டு அவசரகாலச் சட்டம் அமுல்செய்யப்பட்ட பின்னர் அரசினால் கைதுசெய்யப்பட்டு தனியாகச் சிறைவைக்கப்பட்டார்.

தேர்தல் அறிவித்தல் வெளிவந்ததும் திரு. மொரார்ஜி தேசாய் தனிமனித உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்குடன் எதிர்க்கட்சிகளைக் கொண்ட ஐக்கிய ஜனதா கட்சியை உருவாக்கினார்.

பொதுத்தேர்தலில் ஜனதா கட்சி அமோக வெற்றிஅடைந்ததும் பாராளுமன்றத்தில் திரு. தேசாய் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு 1977ம் ஆண்டு 24ம் திகதி இந்தியாவின் பிரதமமந்திரியாகப் பதவிஏற்றுக்கொண்டார்.

[தகவல்: இந்திய தூதரகப் பிரசுரம்.]

# கல்வித் துறையில் புதிய திட்டங்கள்

டாக்டர் பி. சி. சுந்தர்

(கல்வி, சமூகநல, கலாச்சார அமைச்சர்)

உலகின் பெரும் ஜனநாயக நாடுகளில் எங்கள் நாடும் ஒன்று. மக்களுக்கு சமஉரிமை சமவாய்ப்பு உண்டு என்பதை எங்களின் அரசியலமைப்பு உறுதிப்படுத்துகின்றது. வறுமையை முற்றாக ஒழித்து, முழுஅளவில் தொழில் வாய்ப்பை நாட்டில் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் திட்டமிட்ட அபிவிருத்தி முறையொன்றைக் கொணர்ந்துள்ளோம்.

நாட்டு மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் கல்வியை ஊட்டாதவரை கல்வி எல்லோருக்கும் கிடைக்காதவரை ஜனநாயகவாதிகளாக நாம் இயங்குகின்றோம் என்று கூறிக்கொள்ள முடியாது. நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் கல்வி பெறுதவரை அவனது உரிமைகள் - பொறுப்புகள்பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்ளாதவனா, சட்டப்படி அவனுக்குள்ளவை மறுக்கப்படாதவரை எமது ஜனநாயகம் கடுமையான சோதனைக்குள்ளாகவே இருக்கும். திட்டமிடப்பட்ட பல்வேறு சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் பல சந்தர்ப்பங்களில் மக்களின் பேராதரவைப் பெறுவதில்லை. இதற்குக்காரணம், இவற்றை வரவேற்று அவற்றின் பலாபலன்களை அனுபவிக்க மக்கள் இன்னும் தயாராக இல்லை. இதனை வேறுவகையில் கூறுவதென்றால் மக்களின் சமுதாயவளர்ச்சிக்கு கல்விதான் திறவுகோல்.

இதனை அங்கீகரிக்கும் வகையில் கல்வித்துறையை நாட்டில் பரவலாக்கும் திட்டத்துக்கு எமது அரசாங்கம் முதன்மை இடத்தை வழங்கியுள்ளது. ஒருவர் கல்வி அறிவைப் பெறுவது, வாசிக்கவும் எழுதவும் மட்டுமல்ல. கல்வி, ஒருவரின் ஆளுமையையும் திறமையையும்கூட விருத்தி செய்ய வேண்டும். இதனை ஒரு பெரும் செயல் திட்டங்கள் மூலமாகச் சாதிக்கலாம் என்று அரசாங்கம் நம்புகிறது.

இவற்றில் ஒன்று, முதியோருக்கான தேசிய கல்விச் சேவை. இதன்மூலம் 1984ம் ஆண்டளவில் பத்துக் கோடி மக்களுக்கு கல்வி அறிவு ஊட்டப்படவிருக்கிறது.

1978 அக்டோபர் மாதம் 2ம் திகதி இரு கல்வித்திட்டம் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்தியதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களையும் மலைஜாதியினரையும் மற்றும் சமூகத்தில் பிற்பட்டோரையும் கிராமப்புற மக்களையும் எமது தேசிய வாழ்வோடு நெருக்கமாக கொண்டுவரலாமென்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. மற்றைய கல்வித்திட்டங்கள் அடுத்த பத்து வருடகாலத்தில் நல்ல பலனளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

நமது நாட்டிலுள்ள ஆறு வயதுக்கும் பதினான்கு வயதுக்குமிடைப்பட்ட குழந்தைகளில் தொண்ணூறு சதவிகிதத்தினருக்கு அடுத்த ஐந்து வருடகாலத்தில் ஆரம்பக் கல்வி அறிவு ஊட்டவேண்டுமென்பது எமது திட்டம். உரியகாலத்தில் பாடசாலைகளுக்குச் செல்லத் தவறிய

[10-ம் பக்கம் பார்க்க]

# ஜனநாயகம்

ஜனநாயகத்தை மட்டுப்படுத்துவதென்பதை நான் முற்றாக எதிர்க்கின்றேன். நமது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோது சிலர், சகல மக்களுக்கும் வாக்குரிமையை விஸ்தரிக்கக்கூடாதென்ற கருத்தை முன்வைத்துக் கல்வி கற்ற ஒருசிலருக்கு மட்டுமே வழங்கப்படவேண்டுமென்றனர். இல்லையென்றால், ஜனநாயகம் நம்மை எங்கேயோ விட்டுவிடுமென எச்சரித்தார்கள். ஆனால் இந்த யோசனை கவனிக்கப்பட்டுச் செயலாக்கப்பட்டிருந்தால், இந்த நாடு சீர்குலைந்துபோயிருக்கும்.

நான் நினைக்கிறேன், நமது அரசியல் சட்டத்தின் கீழ், நமது மக்கள் சகலரும் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதை, தமது அரசாங்கங்களை அமைத்து வழிநடத்துவதிலும் பங்குகொள்கிறார்கள் என்பது ஒரு வரப்பிரசாதம் என்று நான் கருதுகிறேன்.

என் கருத்தின்படி காலத்திற்குக்காலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு நடக்கும் தேர்தலானது, நமது மக்களுக்கு, நாம் அளிக்கக்கூடிய சிறந்த கல்வியாகுமென நான் கருதுகின்றேன். இந்தக் கல்வியை அவர்கள் வேறு வழிகளால் பெற்றிருக்கமுடியாது. இதன் நல்ல பயன்கள் இப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கிறது. நம் மக்கள் தமது வாக்குச் சீட்டுக்களை வலுவாகப் பாவித்ததை நாம் காண்கிறோம். இது அவர்களது அனுபவத்தினால் ஏற்பட்ட வளர்ச்சி. மக்களின் சிந்தனைத் தரத்தை உயர்த்தவும், சரியான முறையில் எதையும் துணிந்து செய்யவும் அனுபவக் கல்வி தான் சிறந்த நடைமுறையாகும்.

பெரும்பாலான பொதுமக்கள், நல்லது கெட்டது பற்றிச் சிந்திப்பதில்லை. அரசாங்கமும், தலைவர்களும் தங்கள் செல்வாக்கைத் தங்கள் மீது பிரயோகிக்க அனுமதித்துவிட்டுப் பேசாமலிருக்கிறார்கள். இதனால் மனித நலனுக்காக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும், சமுதாயத்தைச் சீர்கெடுப்பதற்கும் எடுக்கும் நடவடிக்கைகள் மக்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே தலைவர்கள், தலைமைப்பதவியில் இருப்பவர்கள் இரு வகையான காரியங்களைச் செய்யமுடியும் ஒன்று, ஆக்கரீதியானது. மற்றையது அழிவுக்கு வழிகோலுவது

தலைமைவகிப்பவர்கள், மக்களை நல்லதை நோக்கியும் அழைத்துச் செல்லலாம். அழிவை நோக்கியும் அழைத்துச் செல்லலாம். ஒரு அரசின் கடமை என்னவென்றால் நல்லவற்றைப் பாதுகாப்பது. அல்லாதவற்றைக் குறைத்து அழித்துவிடுவதுதான். இதுதான் அரசாங்கமும் அதன் நோக்கமும் என்பது பற்றிய எனது கருத்து. ஏனென்றால் இதற்கு மாறான வேறு கருத்தும் உடையவர்களும் இருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

—தேசாய்.

இந்தியப் பிரதமர்

திரு. மொரார்ஜி தேசாயின்

இலங்கை வருகை சிறப்புற

வாழ்த்துகிறோம் !

மேர்க்கன்டைல்

கோப்பறேசன் லிமிட்டெட்

263, செட்டித்தெரு,

த. பெ. எண் : 440,

கொழும்பு - 11.

தொலைபேசி: 31913-6 தந்தி : "PRODUCE"

# அமைதிப்புரட்சியின் அ

# பாரதப்பிரதம

## எதிரிகளும் போற்று

## கண்ணியவான்



1977-ம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய மக்கள் அமைதியான புரட்சியொன்றை நடத்தி முடித்தார்கள்.

கிராமங்களில் வாழும்பாமர மக்களான ஆண்களும் பெண்களும் - நகரங்களில் வாழும் சட்டத்துறையினர், ஆசிரியர்கள், தொழில் துறை ஊழியர்கள் அனைவரும் தங்கள் சுதந்திரத்தைப் பயமுறுத்திக் கொண்டிருந்த சர்வாதிகாரத்துக்கு எதிராக தமது வாக்குச்சீட்டைப் பயன்படுத்தினார்கள்.

சுதந்திரத்துக்காக ஜனநாயகத்துக்காக பரிசுத்தமான பொது வாழ்வை உருவாக்குவதற்காக அளிக்கப்பட்ட தீர்ப்பாகும் அது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸை இந்த வாக்குச்சீட்டுப் புரட்சி புரட்டித் தள்ளிவிட்டது.

சில மாதங்களின் பின்னர் நடந்த மாநிலங்களுக்கான தேர்தலின்போது மக்கள் தமது தீர்ப்பை மீண்டும் வலியுறுத்தினார்கள்.

பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான இந்திய தேசிய சுதந்திர போராட்டத்தை மகாத்மா காந்திதான் முன்னின்று நடத்தினார். முப்பது ஆண்டுகளின் பின்னர் 'இரண்டாவது விடுதலை' என்று கூறப்படும் போராட்டத்தின்போது மகாத்மாவின் போதனைகள் முன்னெப்போதையும் விட அதிகமாகத் தேவைப்படுவதாக இந்திய மக்கள் உணர்ந்தார்கள். எனவே கடந்த 50 ஆண்டு காலமாக மகாத்மாவின் போதனைகளைப் பின்பற்றிவரும் மொரார்ஜி தேசாய்தான் புதிய அரசுக்குத் தலைமைதாங்க வேண்டும் என்றது இயற்கையே.

இறைவனிடம் அவர்கொண்டுள்ள நம்பிக்கைக்கும் சத்தியத்தின்பால் அவர் தம்மை ஒப்புவித்துக் கொண்டிருக்கும் நிலைக்கும் அடுத்தபடியாக மகாத்மாவிடம் அவர் கொண்டுள்ள நம்பிக்கை அமைகின்றது.

1977 மார்ச் மாதம் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்கும் போது அவருக்கு 81 வயது. 65 கோடி மக்களைக் கொண்ட ஒரு நாட்டை நடத்திச்செல்வதென்பது மிகக் கஷ்டமான காரியம்.

பொது அரசியலில் புகுந்து விட்ட மாருட்டங்களைத் தடுத்துக் கொண்டு சாதனை வழியில் நாட்டை இட்டுச் செல்வது அதுவும் பல்லாண்டு காலமாக ஒத்துக்கொண்டு எதிர்த்துக் கொண்டு நின்ற 5 கட்சிகள் ஒன்றிணைந்த நிலையில்-அதுமேலும்கடினமானதாகும், இருந்தபோதிலும் இந்த பளுமிக்கப் பொறுப்பினை ஓர் ஆண்டுகாலம் நிர்வகித்து விட்ட மொரார்ஜியிடம் எதுவித சோர்வையும் காண முடியவில்லை. வாழ்க்கைபற்றிய அவரது தத்துவத்தில் இது தங்கியுள்ளது. அவரே இதுபற்றி இவ்வாறு கூறியுள்ளார்:

'ஒருவருக்கு ஏற்படும் சூழ்நிலையானது இறைவனின் சட்டத்துக்கு அமையவே ஏற்படுகின்றது. எனவே எந்த நிலைமையிலும் மனிதன் உற்சாகத்துடனிருந்து அதில் அவனைத் தரிசிப்பது கடமையாகும். என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரிவதில்லை. எனவே எதுசரியென்று நினைக்கிறோமோ அதன்படி செய்வது மனிதனின் கடமை அதன் பயனை ஆண்டவனின் கட்டளைப்படி நிகழ்வதாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேசமயம் மனிதன் தொடர்ந்தும் நல்ல காரியங்களை தன்னலமின்றிச் செய்துவர வேண்டும். இந்த உண்மையை சாந்திஜியின் வாழ்க்கை எனக்கு உறுதிப்படுத்தியுள்ளது.'

8 சகாப்தங்களாக வாழ்க்கையின் பல்வேறு தாக்கங்களையும் மொரார்ஜிதேசாயின் மெலிந்த சிறு உடல் தாங்கி வருகின்றது. உடலையும் மனதையும் அவர் ஒழுங்காகப் பயிற்றுவித்துக்கொண்டிருப்பதே இதற்குக் காரணம். அவர் முகத்தில் பரபரப்பைக் காண முடியாது. தம்மைவிட பல ஆண்டுகள் இளமையானவர்களுடன் நடக்கும்போது அவர்களைவிட வேகமாக முன்னே நடக்கும் ஆற்றலுடையவராக விளங்குகிறார்.

நாட்டின் பலபாகங்களிலிருந்தும் வரும் பல்வேறுபட்ட மக்களையும் தமது அலுவலகத்தில் சந்திக்கும்போதும்சரி, பைல்களைப் பார்த்துச் செயலாற்றும்போதும்சரி, கூட்டங்களில் பேசும்போதும்சரி பாராளுமன்ற அமளிகளின் போதுசரி மொரார்ஜி தேசாய் மிக அமைதியாகவே காணப்படுவார். அவர் எப்போதுமே திடமாகவும், அமைதியுற்றவராகவும்காணப்படுகிறார். பாராளுமன்றத்திலோ பொதுக்கூட்டத்திலோ அவர் பேசும்போது அவரது குரல் நியாயத்தின்பாற்பட்டதாய் இருக்கும் குரலை ஒருபோதும் அவர் உயர்த்திப் பேசுவதில்லை எதிரிகளுக்கும் கூட தயவுகாட்டுவார். அவரது பேச்சில் எப்போதுமே
கோட்பாடுகளும் தத்துவமும்
இழையோடும். அவரைப்
போன்றவர்களிடம் எவரும்
நகைச்சுவையை எதிர்பார்ப்ப
தில்லைதான். ஆனால் சிலசம
யங்களில் தமது எதிராளிகளை
அவர் சாடும்போது சபை
யோர் தம்மை மறந்து சிரிப்
பில் ஆழ்ந்துபோகும் சந்தர்ப்
பங்கள் ஏற்படுவதுமுண்டு.

### காந்தியத் தத்துவங்கள்

சத்தியம், அகிம்சை ஆகிய
காந்திய தத்துவங்களில் அவர்
தம்மை அர்ப்பணித்து
கொண்டுள்ளார். அகிம்சை
யில் நம்பிக்கையுள்ள ஒரு
ரால் எவ்வாறு ஆட்சி நடத்த
முடியும் என்று சிலர் எண்ண
கூடும். அவரே இதற்குப் ப
லளித்திருக்கிறார். ஒருவன்
அரசியலிலிருந்து ஒதுங்கி
கொண்டு தனது கோட்பாடு


சுதந்திர பொருளாதார

சுபீட்சத்தினை நோக்கி.....

அன்னியர் ஆட்சிக்கொடுமை களைந்தெறியப்பட்டு ஈழமாதா சுதந்திரப் புன்னகை பூத்த இத்தினத்தில் ஈழமைந்தர் வாழ்விலும் சுதந்திரப் பொருளாதார சுபீட்சத்தினை ஏற்படுத்த மக்கள் வங்கி சங்கற்பம் பூணுகின்றது. ஈழத்தாய் மடியில் பூத்த சகல இன மக்களுக்கும் வளமான எதிர்காலத்திற்கு வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றது. ஈழத்தாய் பொருளாதார விடுதலைகாண ஒருங்கிணைந்து உதவுமாறு அன்புடன் அழைக்கின்றது.

PEOPLE'S BANK

மக்கள் வங்கி

# அடிநாதமாய் விளங்கியவர்

# மர்மொரார்ஜிதேசாய்

## றுகின்ற அவர்

ாதுமே
ுவமும்
வரைப்
ளவரும்
ார்ப்ப
கிலசம
ளிகளை
சபை
சிரிப்
ந்தரப்
டு.

ஆகிய
அவர்
த் து க்
கிம்சை
ஒருவ
நடத்த
ணா
ப் பதி
ஒருவன்
துங்கிக்
ட்பாடு

களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமா, அல்லது அரசாங்கத்தின்மூலம் சமூகத்தைக் காப்பாற்றுவதற்காக தமது சேவைகளை வழங்க வேண்டுமா என்பதுபற்றிச் சிந்திக்க வேண்டும் சத்தியத்திலும் அகிம்சையிலும் நம்பிக்கையுள்ளவர்கள் ஆட்சி புரியும் பொறுப்பை ஏற்க மறுத்தால், அவைகளில் நம்பிக்கையில்லாதவர்களின் கைகளில் அது போய்ச் சேர்ந்துவிடும்,''

பதவியின்உச்சியை அடைவதற்கு அவர் நீண்ட கடினமான பாதையைக் கடந்து வரநேர்ந்தது.

1896ம் ஆண்டு பெப்ரவரி 29ம் திகதி பிறந்த திரு மொரார்ஜிதேசாய் 15 வயதாய் இருக்கும்போது பள்ளி ஆசிரியரான தமது தந்தையை இழந்தார். மூத்த புதல்வன் என்ற முறையில் தம் குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு அவரிடம் வந்தது. உபகாரச் சம்பளம் கிடைத்ததன்மூலம் தமது கல்வியைப் பூர்த்தி செய்து பிரிட்டிஷ் அரசின்கீழ் வேலைக்கமர்ந்தார்.

இந்திய மக்கள் அப்போது மகாத்மாகாந்தியின் தலைமையில் சுதந்திரத்துக்காகப் போராடிக்கொண்டிருந்தார்கள். அவர்தமதுகடமைஇங்கே தான் இருக்கிறது என்று உணர்ந்தார். 1930ம் ஆண்டு தமது அரசாங்க பதவியை கைவிட்டு சுதந்திரப் போரில் குதிப்பதற்கு அவர் முடிவு செய்தார். காங்கிரஸ்கட்சியில் அவர் சேர்ந்துகொண்டார். மூன்று தடவைகள் ஜெயில் தண்டனை பெற்ருர். 1937ல் மாகாண ஆட்சி முறையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டபோது அவர் பம்பாயில் ஒரு மந்திரியாஞர்.

இந்தியாவை விட்டு வெளியேறும்இயக்கத் [1942-1945] தின்போது தடுப்புக்காவலில் இருந்து விடுதலையானதும் மீண்டும் 1946ல் பம்பாயில் ஒரு மந்திரியாஞர். 1952ல் முதல்மந்திரியாஞர். 1956ல் அவரை ஜவஹர்லால்நேரு மத்தியமந்திரிசபையில் வர்த்தக கைத்தொழில் மந்திரியாகச் சேர்த்துக்கொண்டார். பின்னர் 1963 வரை நிதியமைச்சராகக் கடமையாற்றிஞர். 1967ல் இந்திராகாந்தி மந்திரிசபையில் பிரதி பிரதம மந்திரியாஞர். 1969ம் ஆண்டு நிதியமைச்சு அவரிடமிருந்து எடுக்கப்பட்டதால் அவர் அமைச்சரவையிலிருந்து விலகிக் கொண்டார்.

1969ம் ஆண்டு காங்கிரஸ் கட்சி பிளவுபட்டபோது மொரார்ஜிதேசாய் எதிர்க்கட்சியில் அமர்ந்தார். 1971ம் ஆண்டு மீண்டும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாஞர். 1975ல் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்டபின் அவர் கைதுசெய்யப்பட்டார்.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அவர் எதிர்க்கட்சிகளை ஒருமுகப்படுத்தி வழிநடத்தியதுடன் ஐக்கிய ஜனதாகட்சியை உருவாக்குவதிலும் மூலவாக நின்ருர். ஜனதா கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். 1977 மார்ச் 24ம் திகதி பிரதம மந்திரியாகசத்தியப்பிரமானம் செய்துகொண்டார்.

பிரதமமந்திரியாகப் பதவி ஏற்றுக்கொண்டவுடன், அவர் மக்களுக்கு விடுத்த செய்தியில் கூறிஞர்.

''வளரும் சமுதாயத்திலும் கூட சுதந்திரமும் உணவும் போட்டிப் பொருள்களாக மாட்டா அவை கை கோர்த்துக்கொண்டு ஒன்ருகச் செல்பவை. ஒருபோதும் பிரித்துவிடக்கூடாது. சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட தன் பின்னர் ஒவ்வொரு தனி நபரையும் வறுமை - தேவைகளிலிருந்து உயர்த்திவிடுவதற்கு இவை எமது கருவிகளாகவேண்டும். பத்தாண்டு காலத்தில் வறுமையை ஒழித்துக்கட்டுவதாக ஜனதாகட்சி உறுதியளித்துள்ளது. புதுடில்லியிலும் மாநில தலைநகர்களில் வீற்றிருப்போர் என்னதான் புத்திசாலிகளாக இருந்தாலும் இதனை ஒருசிலரால் மட்டும் சாதித்துவிட முடியாது. அரசியல் பொருளாதார சக்திகளை பரவலாக்குவதன் மூலமும் மக்களின் பங்களிப்பின் மூலமுமே இதனைச் சாதிக்கமுடியும். குவிந்த அதிகாரங்களைக் கொண்ட அரசு ஜனநாயகத்துக்கு பங்கமானதாகும். எமது பொருளாதார வளர்ச்சிக்கு கிராமங்களை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். எமது சமூகம் ஆதிகாலம் தொட்டே கிராமிய அடிப்படையைக் கொண்டதாகவே இருந்து வந்துள்ளது. எமது சமூகத்தில் 80 சத வீதமானேர் கிராமங்களிலேயே வாழ்கிருர்கள். கிராமங்களும் கிராம மக்களும் மாற்றங்களின் தன்மையை அனுபவிக்கவேண்டும். கிராமவாசிகள் நகரங்களில் வேலைதேடி வருவதை மாற்றியமைக்க வேண்டும், மாருக நகரவாசிகள் கிராமங்களை நாடிச் செல்லவேண்டும்.

### நெருக்கடிகால ஒடுக்கல் யந்திரம்

நெருக்கடிகாலத்தில் உருவாக்கப்பட்ட ஒடுக்கல்யந்திரம் பெரும்பாலும் நொருக்கப்பட்டுவிட்டது. அரசியல்கட்சிகள் மீது விதிக்கப்பட்டிருந்த சகல கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுவிட்டன. கலந்துறவாடும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. நீதித்துறை மீண்டும் சுதந்திரமாக இயங்குகின்றது. பத்திரிகைத்துறையும் அவ்வாறே!

பத்திரிகை நீதித்துறைகளின் சுதந்திரம் தொடர்பாக மொரார்ஜிதேசாய் கொண்டிருக்கும்நம்பிக்கையேபொருளாதார அபிவிருத்திதொடர்பாக அவர் கைக்கொள்ளும் அணுகுமுறைக்கும் அடிப்படையாக அமைகிறது. பொருளாதார அபிருத்தியில் புதிய சிந்தனைக்கு இடம்கொடுக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி விகிதத்திலும் உற்பத்தி விஷயத்திலும் உயர்ந்தபட்சம் என்ற நோக்கத்தின் மீது அல்ல, அதிக சாதனை என்பதன்மீதே அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

சுத்தமான, ஆரோக்கிய மானவளமான தேவைகள் அற்ற வாழ்வினை சகல இந்தியனும்பெறவேண்டும் என்பதே நோக்கம். அதேசமயம், மேற்கத்திய ஆடம்பர பொருளாதாரம் வீண்செலவை ஏற்படுத்துவது வளரும் நாடுகளுக்கு ஒத்துவராது என்பதில் அவர் தெளிவான கருத்

(10-ம் பக்கம் பார்க்க)

இலங்கை - இந்திய உறவு மேலும் வளர
திரு. மொரார்ஜி தேசாயின்
நல்லெண்ண விஜயம்
வழிவகுக்கும்.....
சுதந்திரதின விழா சிறக்க
நாமும் வாழ்த்துகிறேம்!

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

அணிசேரா நாட்டு
இலங்கையின் கொள்கை
இந்தியப் பிரதமரின் வருகையால்
மேலும் வலுவடைய வாழ்த்துகிறேம்.
விழா சிறக்க
எமது நல்லாசிகள்....

★

வி. ரி. வி.
தெய்வநாயகம்பிள்ளை
அன் கோ.,
இல. 37, ஐந்தாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

வரவேற்கிறோம் ! வாழ்த்துகிறோம் !!

# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் தமது கவர்ச்சிமிக்க சேமிப்பு ஊக்குவிப்பு "போனஸ்" திட்டத்தினை சிங்கள-தமிழ் புத்தாண்டினை முன்னிட்டு, 1979 ஏப்ரல் 30ம் திகதி வரை நீடிக்கிறது என்பதனை அறியத்தருகின்றனர்

இந்த போனஸ் திட்டம் ரூபா 2500/-க்கும் குறையாத 2 வருட வைப்புக் கணக்கை 1979 ஏப்ரல் 30-ம் திகதிவரை ஆரம்பிப்போருக்கு ஊக்கமாக 6% முதல் 8% வரை வழங்குகிறது. **6%-8%**

தற்பொழுது 2 வருட வைப்புக்களுக்கு வழங்கப்படும் வழமையான, உயரிய 15% வட்டியுடன் மேலதிகமாகச் செலுத்தப்படுவதே இந்த ஊக்குவிப்பு போனஸாகும். **15%**

இதன்மூலம் வைப்பாளர் தமது வைப்புக்களுக்கு வட்டியும் போனஸுமாக 19% வரையிலான வருமானத்தை மாதாந்தம் பெறுகிறர். **19%**

வங்கியைப் போன்ற உறுதியும், பாதுகாப்பும், உத்தரவாதமுமுள்ள மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டை விட வேறு எந்தவொரு நிதி நிறுவனமும் இதுபோன்ற உயரியவட்டி விதத்தை சேமிப்பு வைப்புக்களுக்கென வழங்குவதில்லை.

| | |
|---|---|
| முழு முதிசச் சொத்து | 116, 000, 000 |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 7, 200, 000 |
| வைப்புக்கள் | 75, 000, 000 |

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையில் பெரிய உறுதிவாய்ந்த ஒரு நிதி நிறுவனமாகும். அவ்வாறே உங்கள் பணத்திற்கும் உறுதிவாய்ந்த உயரிய பாதுகாப்பினை அது நல்குகிறது.

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:-

## மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,



(நிதிப்பிரிவு)

51 - 53, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 1.

தொலைபேசி: 26611-19.

கிளை நிலையங்கள்:-

யாழ்ப்பாணம்: 11/8, ஸ்ரான்லி, வீதி. தொலைபேசி: 321.

*மாத்தறை: 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி: 2466.*

*அநுராதபுரம்: 2, ஹரிஸ்சந்திர மாவத்தை, தொலைபேசி: 534.*

*கண்டி: 901/A, பேராதனை வீதி. தொலைபேசி: 4199.*

**ஏஜண்ட்மார் எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
பத்மினி - ராதா
**சித்தி**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ONE CHANCE IN A THOUSAND
(War Film - color Scope)


## பண்ணிசை

[கொக்குவில்]

காரைநகர் சிவாச்சிரமத்திக் நடைபெற்ற தாயுமானவர் குருபூசை விழாவில் பண்ணிசைச் செல்வன் திரு எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி நடைபெற்றது.


**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - மஞ்சுளா
**எங்கதங்கராஜா**

தினசரி 4 காட்சிகள் கடைசிவாரம்
**ராணி** (யாழ். நகர்) எம் ஜி ஆர். - அஞ்சலிதேவி நடித்த
**சக்கரவர்த்தித் திருமகள்**
(புதிய பிரதி)

மகத்தான 2-வது மாதம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
**உயர்ந்தவர்கள்**

4-வது ஜனத்திரள் வாரம்
**ராஜா** தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
**பயணம்**

**லிடோ** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார் - கமலஹாசன் - ஜெய்சித்திரா
**சொல்லத்தான் நினைக்கிறேன்**

**லிடோ** போன்: 7630 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ். நகர்) **ஆசை அறுபதுநாள்**

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர் ... வீரப்பா ... சாவித்திரி
**ம கா தே வி** (புதிய பிரதி).
9-2-79 SEVEN NIGHTS IN JAPAN

**REGAL** ROMANIAN FILM FESTIVAL
(Jaffna) From 29-1-79 to 3-2-79
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m.
THE LUST OF GOLD

**மனோகரா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) ஜெமினி - வாணிஸ்ரீ
**தபால்காரன் தங்கை**
(புதியபிரதி)
6-2-79 முதல் நூற்றுக்கு நூறு

7-வது ஜனத்திரள் வாரம்
**வின்ஸர்** போன்: 466
தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் **பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)


# "உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுபட்டு உழைப்போம்!"

(அரியாலை)

'இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைப் பேணுவதற்கு தமக்கென தனித்தமிழ்நாடு கோரும் இவ் வேளையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆதிக் குடிகளாகவும், உரிமை மறுக்கப்பட்டவர்களாகவும் வாழும் நாம் ஒன்றுபட்டு எமது உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் ஏன் குரல் எழுப்பக்கூடாது? பன்னெடுங்காலமாக உரிமைகள் மறுக்கப்பட்ட இனமாக வாழும் நாம் எமது உரிமைகளைப் பெறுவதற்காக எமக்குள் இருக்கும் சகல வேறுபாடுகளையும் மறந்து ஒன்றுபட்டு எமது விடுதலைக்காகப் போராட வேண்டிய நிலையில் இன்று இருக்கிறோம்.''

இவ்வாறு தென்மராட்சி கரம்பகத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் தென்மராட்சிக் கிளையின் 4-வது வருடாந்த மகாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைப் பொதுச் செயலாளர் திரு எஸ். பி. ஜீவானந்தம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கிளைச் சங்கத் தலைவர் திரு பி. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் செயலாளர் தொடர்ந்து பேசுகையில், 'நாம் இன்று அனுபவிக்கும் பல உரிமைகள் எமது போராட்டத்தின் மூலம் கிடைத்தவையாகும். இந்நாட்டில் வாழும் உரிமை மறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம் எமக்குள் இருக்கும் சகல வேறுபாடுகளையும் களைந்து ஒன்றுபட்டு நாம் வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாப்பதுடன், வென்றெடுக்கப்பட வேண்டிய உரிமைகளை வென்றெடுக்கவும் நாம் உழைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் திரு. எஸ், பி. மார்க்கண்டு பேசுகையில் சமூக ஐக்கியத்தின் மூலமே எமது உரிமைகளைப் பெற முடியுமென்றும் மகாசபையினால் நடாத்தப்பட்டு வரும் கல்விச் சகாய நிதியின் மூலம் சுமார் இருபத்தைந்து மாணவ-மாணவிகள் கல்வி கற்க மகாசபை உதவி வருகிறதென்றும் இந்த நிதியின் வளர்ச்சிக்கு நீங்கள் உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இறுதியில் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

## வதிரி டயமன்ட் இறுதியாட்டம்

[கொக்குவில்]

வதிரி டயமன்ட் விளையாட்டுக் கழகத்தின் 10 வது 'கந்தசாமி ஞாபகார்த்த' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் வதிரி டயமன் விளையாட்டுக் கழக மைதானத்தில்நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்பஸ் விளையாட்டுக் கழகம்மோதியது. குருநகர் பாடும்மீன் விக்கினர் பொம்பஸ் விளையாட்டுக் கழகத்தை 5—0 கோல்களால் வென்று சாம்பியன் கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

சிறந்த விளையாட்டு வீரருக்கானவெற்றிக்கிண்ணம் பாடும்மீன் விளையாட்டுக் கழகத் தலைவர் திரு ஜே ஏ. கஸ்ரினுக்கு வழங்கப்பட்டது.

இப்போட்டிக்கு திரு. த. இரத்தினசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

பிரதம விருந்தினர்களாக சட்டத்தரணி திரு. கிருஷ்ராஜாவும் அவரது பாரியாரும் கலந்துகொண்டனர். [உ]

எரிந்துகொண்டிருந்த

## பிணத்தின் தலையை திருட முயன்றதை ஏற்றார்

(மட்டுவில்)

மயானத்தில் எரிந்துகொண்டிருந்த பிணத்தின் தலையை எடுக்க முயன்ற நபருக்குத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது, தீர்ப்பு இம்மாதம் 7-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கண்ணுடிப்பிட்டி மயானத்தில் இச்சம்பவம் நடைபெற்றிருந்தது

சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகம் என்பவரின் பிணம் மயானத்தில் சிதையில்வைத்து எரிக்கப்பட்டது. இப்பிணத்தின் தலையை எடுக்க முயன்றதாக நுணுவிலைச்சேர்ந்த வல்லிபுரம் மாணிக்கம் என்ற 60 வயது நபர் சாவகச்சேரிப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாணிக்கம் குற்றத்தை ஒப்புக்கொண்டார் நீதிபதி அவரை இம்மாதம் 7ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பை ஒத்திவைத்தார். [உ]

கலாபதி உட்பட

## இரு வாலிபர்கள் கைதாகி விடுதலை

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை வாசிகசாலை யடியில் நின்ற இரு இளைஞர்கள் வல்வெட்டித் துறைப்பொலிசாரால் நேற்று முன்தினம் காலை கைதுசெய்யப்பட்டு மாலை விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

திரு. கே. பாலசுப்பிரமணியம் கலாபதி, திரு. பாஸ்கரன் ஆகிய இரு இளைஞர்களுமே கைதாகி விடுதலையானவர்களாவர். (கெ)

## ஈழத்துச்சிதம்பர கோபுர வேலைகள் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் ஆதிமூர்த்த வாயிலாகிய ஐயனார் வாசலில் மூன்று லட்ச ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் சித்திரவேலைப்பாடுகளுடன் கூடிய கோபுரத்திற்கான பூர்வாங்க வேலைகள் விசேஷ பூசை ஆராதனைகளுடன் ஆரம்பமாகியுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த பாடசாலைகளின் உயர்வகுப்பு மாணவர்கள் பூர்வாங்க வேலைகளில் முக்கிய பங்கெடுத்து சிரமதான முறையில் கருமமாற்றி வருகின்றனர்.

பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னர் அத்திபாரம் போடப்பட்டு இன்னமும் வேலைகள் ஆரம்பிக்கப்படாமலுள்ள இராச கோபுரத்தின் வேலைகளும் ஐயனார் வாசலின் கோபுர வேலைகளும் ஒன்றாகவே ஆரம்பிக்கப்பட்டு நடைபெறவுள்ளன. இவ்விரண்டு கோபுரத்தினதுவேலைகளைசெய்யசுமார் எட்டு லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

காரைநகர் வர்த்தகர் திரு மு. பொன்னம்பலத்தின் நிதியுதவியுடனும் பொதுமக்கள் ஒத்துழைப்புடனும் இப்பணிகள் நடைபெறுகின்றன. (உ)

## சிரமதானம்

[அரியாலை]

அரியாலை மேற்கு நல்லியக்க சபையின் ஆதரவின் கீழ் கலைமகள் வட்டாரத்திலுள்ள பூமகள் வீதியை சிரமதானம் மூலம் செப்பனிட்டனர். இச் சிரமதானப் பணிக்கு நல்லியக்கசபைச் செயலாளர் திரு. கா. பீதாம்பரம் தலைமை வகித்தார்.

## இலவச நூல்கள் நாளை விநியோகம்

[அரியாலை]

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைக் கல்விச் சகாய நிதியின் ஆதரவில் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் வைபவம் நாளை ஞாயிறு மாலையில் நடைபெறவிருக்கிறது

மகாசபைத் தலைவர் திரு எஸ். வி மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புத்தகங்களை வழங்குவார்

இன்று

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும் பரிசளிப்புவிழாவும்

(பளாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடத்திவரும் சி. சந்தவனம் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்கான வருடாந்த 1-ம் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டி இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

நிலைய மைதானத்தில் நொக் அவுட் முறையில் நடாத்தப்பட்டுவரும் இச்சுற்றுப் போட்டியின் 11 வீரர் போட்டியும், 7 வீரர் போட்டியும் ஒருமித்து இடம்பெறும்.

போட்டி முடிவில் திரு. சி. சுப்பிரமணியம்தலைமையில் மாலை பரிசளிப்புவைபவம் இடம்பெறும் யாழ் கச்சேரி அலுவலக உதவியாளர் திரு. இ. சபாரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சபாரத்தினம் பரிசில்கள் வழங்குவார். திரு. வ கிருஷ்ணசாமி திரு. எம். ஜெகநாதன் ஆகியோர் உரையாற்றுவர்,

## ரஷ்யாவுக்கு கார்ட்டர் விளக்கம்

வாஷிங்டன், பெப் 2

சீன உதவிப் பிரதமர் டெங் ஷியாவோ-பெங்குடன் நடத்திய பேச்சு வார்த்தை விபரங்களை அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் ரஷ்யாவிடம் தெரிவித்துள்ளார்

சீன உதவிப் பிரதமர் மேற்கொண்டுள்ள அமெரிக்க விஜயத்தின் போது வெளியிட்ட சில கருத்துக்கள் ரஷ்யாவைச் சாடுவனவாக இருந்தமையாலேயே இது பற்றி விளக்குமாறு ரஷ்ய அமெரிக்காவிடம் கேட்டுக் கொண்டிருந்தது

அணு ஆயுத உற்பத்திக் குறைப்புப் பற்றியும் திரு கார்ட்டர் ரஷ்யாவிடம் விளக்கியுள்ளார், [உ]

# ஈழத்தமிழர் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி] ஆர். பிரேமதாசா ஆகியோருடன் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கமும் வரவேற்கவிருக்கிறார்.

ஆருந்தேதி பார்லிமெண்ட் கட்டடத்தில் ஜனாதிபதி ஜே. ஆரின் மார்பளவு வெண்கலச் சிலையை இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் திறந்துவைத்தபின் பார்லிமெண்டில் விசேஷ உரை நிகழ்த்துவார். இந்தியப் பிரதமரை வரவேற்றுச் சபாநாயகர் ஜனுப் பாக்கீர் மாக்கார் உரை நிகழ்த்துவார். இந்தியப் பிரதமரின் உரை முடிந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் நன்றியுரை நிகழ்த்துவார்.

## விருந்துகளில் பேசலாம்

இந்தியப் பிரதமருக்கு அளிக்கப்படும் விருந்துவைபவங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கலந்துகொள்ளவிருப்பதால் இந்தியப் பிரதமரும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பு ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## மூன்று நாள் தங்குவார்

இன்று முற்பகல் கட்டுநாயகா விமானநிலையத்தில் வந்திறங்கும் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், அங்கிருந்து ஜனாதிபதி ஜே. ஆருடனும், பிரதமர் பிரேமதாசாவுடனும் ஹெலிகொப்டர் விமானத்தில் கண்டி பேராதனைப் பூங்காவுக்கு நேராகச் செல்வார்.

இன்று பிற்பகல் 3-00 மணிக்கு கண்டி குயின்ஸ் ஹோட்டலில் இந்திய வம்சாவளியினர் அளிக்கவிருக்கும் வரவேற்பு வைபவத்தில் நாடற்றவர் பிரச்னையும், பிரஜாவுரிமைப் பிரச்னை பற்றியும் பேசப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று மாலை ஜனாதிபதி ஜே. ஆரும், திருமதி ஜயவர்த்தனவும் விருந்தளிப்பர். நாளை சுதந்திரதினக் கொண்டாட்ட வைபவங்களில் பிரதமர் தேசாய் கலந்துகொள்வார். இன்று பேராதனைப் பூங்காவில் தமது விஜயத்தின் நினைவாக ஒரு மரக்கன்றையும் திரு. தேசாய் நாட்டுவார். [ம]

# கல்வி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி) குழந்தைகளுக்கும் நாம் கல்வியறிவு புகட்டியாக வேண்டும். இத்திட்டங்களை அமுல் செய்வதன் மூலம், இளமையின் கல்வி பெறுதவர் தொகை மிகவும் குறையும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

கல்வி பரவலாக்கப்பட்டு நாட்டின் எல்லாக் குழந்தைகளும் கல்வி பெறும் நிலைவரும் போது இவர்கள் நாட்டின் சகல பிரஜைகளுக்குமுள்ள சம உரிமைகளையும் சமவாய்ப்புகளையும் பெறும் நிலைக்கு வர முடியும்.

எமது கல்வி, எமது சுற்றாடலுக்கும் தேவைக்கும் ஏற்றதாகவும் எமது பாரம்பரிய கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் கட்டிவளர்க்கக் கூடியதாகவும் - இவற்றிற்கு அடித்தளமாக இருக்கக்கூடியதாகவும் அமைய வேண்டியது அவசியம் உற்பத்தி வேலை, சமூகத் தேவைகள் ஆகியவை பாடவிதானத்தில் முக்கியம் இடம்பெற வேண்டும். இது அமைவதன்மூலமே, சமூக மற்றும் அபிவிருத்தி வேலைகளில் மாணவர்கள் பங்கேற்கவும், மாணவர்கள் தங்களின் இளமைப் பருவத்திலேயே தங்களது திறமையை விருத்தி செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

எல்லாக் கட்டங்களிலும் பிராந்திய மொழிகள்போதனை மொழிகளாக்கப் பட்டிருக்கின்றன விஞ்ஞானம் முக்கிய இடம்பெற வேண்டும். கல்வி, எந்தவித இன மத, சாதி மற்றும் ஏற்றத்தாழ்வுகளுமின்றி எல்லோருக்கும் கிடைக்கக் கூடியவகையில் முன்னேற்றம் காண வேண்டும். கல்விதான் ஒரு மனிதனின் தராதரத்தை மதிப்பிடுவதால் கல்வியின் முக்கியத்துவத்தை நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உணர்த்துதல் அவசியம். இதன் அடிப்படையிலேயே கல்வித் திட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

இக்குறிக்கோள்களை விரைவாகவே கிடைய அரசு முயற்சிக்கிறது. இதனடிப்படையில்தான் புதிய கல்வித் திட்டங்களும் வரையப்பட்டுள்ளன. இதற்கு சகல மக்களின் பூரண ஒத்துழைப்பையும் அரசு வேண்டி நிற்கிறது.

# சாவகச்சேரி நூல்நிலையக் கட்டடம்

## இன்று அடிக்கல்

[யாழ்ப்பாணம்] சாவகச்சேரி மக்களின் நலனுக்கென இன்றுகாலை 9 மணியளவில் புதிய நூல்நிலையத்துக்கான அடிக்கல்நாட்டுவிழா நடைபெறும். விசேஷ ஆணையாளர் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழாவில் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் அடிக்கல்லை நாட்டிவைப்பார்.

இந்தவிழாவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் மற்றும் பிரதேசப்பகுதி பிரமுகர்களும் மக்களும் கலந்துகொள்வர். பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின்கீழ்சுமார் 45 ஆயிரம் ரூபா செலவில் இந்த நூல் நிலையக்கட்டிடம் நிறுவப்படவிருக்கிறது.

# அமைதிப்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி] துள்ளவராக விளங்குகிறார். மேலதிக தொழில்மயம், மேலதிக நகர வாழ்க்கை விஸ்தரிப்பு என்ற தவறினை இந்தியாவும் செய்துவிடக்கூடாது. இது பதற்றத்தையும் பரபரப்பையுமே ஏற்படுத்தும். அது முடிவுறுது ஒரு ஓட்டப்பந்தயமாகிவிடும் என்று கருதுகிறார் அவர்.

வெளிநாட்டு விஷயங்களில் மொரார்ஜிதேசாய் அணிசேராக் கொள்கையைப் பலமாக வலியுறுத்துபவராகவே இருந்து வந்துள்ளார். அவர் தமது வாழ்க்கையிலேயே ஏற்படுத்திக் கொண்டுள்ள அணிசேராக் கொள்கையின் ஒரு விஸ்தரிப்பாகவே இதனை அவர் கருதுகிறார். இது அவரைப் பலர் தவருக புரிந்து கொள்ளும்படி செய்துள்ளது. ஆனால் அவரது பரம எதிரியும்கூட கொள்கையையும் செயற்பாட்டையும் ஒருங்கிணைந்து இசைவுபடுத்தும் அவரது திறமையையும் கண்ணியத்தையும் கௌரவிக்காமல் போவதில்லை. (பெ]

# காங்கிரஸ் செயற்குழு

[யாழ்ப்பாணம்] தரப்படுத்தலை எதிர்த்து என்ன நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய, இன்று காலை தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு கூடுகிறது.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தலைமையில், அவரது இல்லத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் சுதந்திரதினம் தொடர்பான நடவடிக்கை பற்றியும் ஆராயப்படுமாம். [ச]

# 6-வது டெஸ்ட்

கான்பூர், பெப் 2

மேற்கிந்திய-இந்திய 6-வது இறுதி டெஸ்டிலும் இந்திய வீரர்கள் அபாரமாக ஆடி ஆட்டநேர இறுதியில் முதல் இன்னிங்ஸில் 3 விக்கட்டுகளை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

குண்டப்பா விஸ்வநாத் 94 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருக்கிறார்.

காப்டன் சுனில் கவாஸ்கார் 49 நிமிடங்களில் 40 ஓட்டங்களைப் பெற்றார். 40 ஓட்டங்களில் 2 சிக்சர்களும் 5 பௌண்டரிகளும் அடித்தார். சௌகான் 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். [உ]

# இந்திய செய்தி பிரதிநிதிகள்

[கொழும்பு] இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தையொட்டி இந்திய வானொலி தகவல்திரைப்படப் பிரிவு, தொலைக்காட்சிப் பிரிவு செய்தி ஏஜன்ஸிகள் ஆகியவைகளின் பிரதிநிதிகளும் நிருபர்களும் நேற்று கொழும்பு வந்துசேர்ந்தனர்.

# வேறுபாடுகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) காட்ட வேண்டும். கடையடைப்பு, ஹர்த்தால், வேலை நிறுத்தம் போன்றவற்றை அமைதியான முறையில் தமிழ் மக்கள் யாவரும் மாணவர்களுக்கு ஆதரவு வழங்கவேண்டும். அரசியல் வேறுபாடுகளை மறந்து அனைவரும் எதிர்ப்பில் ஈடுபடவேண்டும்.'' [க-அ]

# சிறப்பிதழ்

இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாயின் இலங்கை விஜயத்தையொட்டி இன்றைய 'ஈழநாடு' அதிக பக்கங்களுடன் சிறப்பிதழாக வெளிவருகிறது.


தற்பொழுது நாடெங்கும் விற்கப்படுகின்றது

இன்னும் சில வாரங்கள் மட்டும்
கையிருப்பில் இருக்கக்கூடும்
இங்கிலாந்து ஏற்றுமதி பரிசுபெற்ற-
உலகப் பிரசித்தி பெற்ற-

ஒரிஜினல் இங்கிலிஸ் வில்லியர்ஸ்
என்ஜின் பூட்டப்பட்ட 2'' யூனியர்

சிக்மா பம்ப்ஸ்

பிரபல வர்த்தகர்களிடமும் ப. நோ. கூ. சங்கங்களிலும் கிடைக்கும்.

CEYGMA PUMPS
WITH WORLD FAMOUS ENGLISH VILLIERS ENGINES



அத்துடன் ஈழமெங்கும் விரும்பிக் கேட்கும் கீழ்க்காணும் சிக்மா இலக்றிக் பம்புகள் தற்சமயம் கையிருப்பில் உண்டு.

2'' x 1¼'' 1 எச். பி. (H. P.) அமெரிக்கன் மோட்டர்
1½'' x 1¼'' ½ எச். பி. (H.P.) வீட்டுப் பாவனை மோட்டர்
2'' x 2'' 1 எச். பி. (H. P.) மூன்று பேஸ் (3 Phase 400 V)
2'' x 2'' ட்ராக்டர் பம்புகள்
2'' x 2'' வில்லியர்ஸ் சீனியர்பம்புகள்
மற்றும் 3'', 4'', 6'' டீசல் அல்லது இலக்றிக் பம்புகள் இரண்டு மாதத் தவணைக்குள் கிடைக்கும்.

மேலும் விபரங்கட்கு

யாழ்ப்பாணம் - பக்டரி: யூனைட்டட் அக்ரோ
என்ஜினியரிங்-நாவற்குழி
(United Agro Engineering)

ஆபீஸ்: 50, 1ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7050

கொழும்பு: கொன்ராக்ஸ் அன் சப்ளைஸ் (Mfg) லிமிட்டெட்.
Contracts & Supplies (Mfg) Ltd.
199, வாக்சால் வீதி, கொழும்பு-2
தொலைபேசி இல: 33921 - 24312.


# மரண அறிவித்தல்

## நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்

சிவாகம ஞானபானு. பிரதிஷ்டாபூஷணம், இந்துமத பீடாதிபதி நயினை சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் காலமானார். இவர் நயினாதீவு நாகபூஷணி அம்மன்கோவில் ஆதீன பிரதம குருவும். புங்குடுதீவு கந்தசாமி கோவில் பிரதம குருவும், ஐயாத்துரைக்குருக்களின் ஏகபுத்திரனும், விசாலாட்சி அம்மாளின் கணவரும், வாகீஸ்வரி அம்மா, நாகரெத்தின அம்மா, கலாவதி ஆசிரியை, நாதரூபி, இராஜேஸ்வரன் ஆசிரியர், வாமதேவக்குருக்கள் ஆகியோரின் தந்தையும் குகதாசசர்மா, கணேசராஜக்குருக்கள் மலேசியா, பிரகதீஸ்வரசர்மா, இரகுநாதக்குருக்கள் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஆத்மசாந்திக்கிரிகைகள் புங்குடுதீவில் 4-2.79 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். 153

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 3-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.